1260

உ
முருகன் துணை.

வடிவாம்பாள்

அல்லது

கற்பைக் காத்தக் கட்டழகி

4-MAR 1932

இது

தமிழ் நாவலர்

சு. கு. கோவிந்தசுவாமிப் பிள்ளை

அவர்களெழுதியது.

பிரசுரஞ்செய்தவர்
சி. சொக்கலிங்க முதலியார்,
கௌரிவிலாச புத்தகசாலை,
சௌகார்பேட்டை, சென்னை.
1932.

காப்பிரைட்
விலை அணா 6

O-,3MGP5,V
N32
149496

உ

முருகன் துணை.

வடிவாம்பாள்

அல்லது

கற்பைக் காத்தக் கட்டழகி

இது,

சென்னை "விவேகபாநு" "ஆசிரியராயிருந்தவரும்,
"மதனகமலீலை" வர்த்தசயூகம்" "கைத்தொழில் ஜீவிய போதினி"
"கொக்கோக ரகசியம் அல்லது வாழ்க்கையின் மர்மம்"
"தனபாலன் அல்லது தாசிகளின் மாயவஞ்சக சூழ்ச்சிகள்"
ஞானம்பாள் அல்லது கற்புள்ள தாசிப்பெண்"
முதலிய பல நூலாசிரியருமான,

தமிழ்நாவலர்

ச. கு. கோவிந்தசுவாமிப் பிள்ளை

அவர்களெழுதியது.

பிரசுரஞ் செய்தவர்:—

சி. சொக்கலிங்க முதலியார்,

கௌரிவிலாச புத்தகசாலை,

சௌகார்பேட்டை, மதராஸ்.

உரிமைப் பதிவு]

1932

[விலை அணா. 6.

PRINTED AT
THE "MANORANJINI" PRESS,
SOWCARPET, MADRAS.

உ

முருகன் துணை.

ஆக்கியோன் வாக்கியம்

அறிவான் மிக்கீர்!

தற்காலம் மக்கட்குக் கல்வியை விருத்தி செய்வதற்கும், நன்னெறியைப் போதிப்பதற்கும் நவீனம் என்ற நாவல் (கற்பனாலங்காரக் கதை) கள் முக்கிய சாதனமாமென்பது வெளிப்படை!

இதுகாறும் நான் கற்பனாலங்காரக் கதைகளெழுதுவதற்கு அவ்வளவு முயற்சி யெடுத்துக்கொள்ளவில்லை யெனினும், தற்காலம் மக்கள் மனம் பெரிதும் கதைப்போக்கிலே மிக விழைவுற்றிருக்கின்ற தென்பதுணர்ந்துச் சிறு சிறு கதா நூல்களை யெழுதத் துணிந்தனன்.

விரிவின்றி விடயங்களைச் சுருக்கி "சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்" என்ற முறையில் சிறு சிறு கதா நூற்களாக வெழுத முன்வந்தது மக்கள் நன்மையைக் கருதியேயாம். அஃதென்னையெனின், விரிந்து பரந்த நோக்கத்துடன் பெரிதாகும் புஸ்தகங்களைப் படித்ததற்குச் சிலருக்கேக் காலம் கிடைக்கு மல்லாமல், ஏனையோருக்குங் கிடைக்காதென்பது கருதியேயாம். எனவே, விடயங்களை வீண் வர்ணனை செய்யாமல் விடயங்களைச் சுருக்கி வேண்டுவன கொண்டு விச்சிறிய நவீனத்தை யெழுதலானேன்.

யான் நூலாராய்ச்சியும், மிகுந்த வறிவு மில்லாதவனே யாயினும், தமிழ்மொழியினிடத் தெனக்குண்டான வார்வ மொன்றே இதனை யெழுதச் செய்யும்படித் தூண்டியது.

இதிற் காணப்படும் குற்றங் குறைகளைப் பொறுத்து, குணத்தைக்கொண்டு, அடியேனைக் கௌரவப் படுத்திப் பின்னும் பல வெழுதத் தக்க ஊக்கத்தையும், உற்சாகத்தை யும் தரும்படி யன்பர்களைப் பன்முறையும் வணக்கத்துடன் கேட்டுக் கொள்கிறேன்.

இச்சிறிய நவீனத்தை யன்புடன் ஏற்றுப் பிரசுரித்த ஸ்ரீமான். சி. சொக்கலிங்க முதலியாரவர்கட்கும், மனோ ரஞ்சினி யச்சிக்கூடத் தலைவருக்கும் எனது நன்றியறித லுரிதாகுக! எல்லோர்க்கும் எல்லாம் வல்ல இறைவனருள் புரிவானாகுக!

சுபம்! சுபம்!! சுபம்!!!

சௌகார்பேட்டை,
சென்னை.
25—1—1932

இவ்விதம்,
தங்களன்பிற்குரிய
சு. கு. கோவிந்தசுவாமி.

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!!

விரைவில் வெளிவரும்

கோமகன் கொலை

(ஓர் அரிய துப்பறியும் நாவல்)

இதன் விலை அணா 12.

உ

முருகவேள் துணை.

வடிவாம்பாள்

அல்லது

கற்பைக் காத்தக் கட்டழகி

விநாயகர் துதி.

உத்தமமென் றுயர்மறைக ளுரைத்தவழி யொழுகிநல
முயரும் பெண்க
ளுத்தமமென் றுலகறையு மற்றவரை மறைபேசா
வுண்மை கண்டே
உத்தமமென் றுயர்கற்பி னின்றவடி வாம்பாளி
னுயருஞ் சரித்
முத்தமமென் றுலகறிய வுரைக்ககண பதியைதின
முஞற்று வோமே.

முதலாவது அத்தியாயம்

அலைகடலை யாடையாகக் கொண்ட விப்பூமண்டலத்திற் பல வளங்களும் பெருகியுள்ள வட நாட்டின் கண் "விஜயபுரி" என்று ஒரு நகர மிருந்தது. அந்நகரம் பார்ப்போர் கண்களைக் கவரத்தக்க மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் அலங்காரமாக வமைந்து விளங்கிற்று. மேலும் அந்நகருக்குச் சமீபத்தில் மலை யொன்

றிருந்தமையால், அந்நகரத்தில்வசிக்கும் ஜனங்களுக்குச் சுகா தாரம் சுலபமாய் இருந்தது. அந்நகரத்தின் கண்ணுள்ள ஜனங் கள் வெய்யிற்காலத்தில் மலைச்சிகரத்தில் சிரமமில்லாமல் வசித்து வந்தார்கள். பற்பல நாட்டிலுற்பத்தியான தானி யங்களெல்லாம் அந்நகரத்துக்கு வந்து நிறைந்து ஜனங்களுக் குச் சௌகரியத்தைச் செய்தன. அந்நகரத்தைச் சுற்றிலும் என்றும் வற்றாதவெள்ளத்தோடுகூடிய "புஷ்கரணி" என்னும் புண்ணிய நதியானது வளைந்து சூழ்ந்திருந்து அழகுபெறச் செய்தது. அவ்விஜயபுரியை முறையே பல வேந்தர்கள் அர சாண்டு வந்தார்கள். ஒரு காலத்தில் அவ்வரசாங்கத்தில் ஜய பாலன், தனபாலன் என்னும் இருவர் மந்திரியாகவிருந்து வந் தார்கள். அம்மந்திரிகளிருவரும் ஒருவருக்கொருவர் பொறா மைகொண்டு மனோ ஒற்றுமையின்றி கலகத்திலீடு பட்டவர்களா யிருந்தார்கள். கலகத்தி லீடுபட்டவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ள மாட்டார்களென்பது இவ்விரு மந்திரிகளுக்கு ளிருந்து வந்தது பெரும் ஆச்சரியமன்று! ஆகவே, மந்திரிகளிருவரும் பேசிக்கொள் வதும் நிறுத்திவிட்டார்கள். நாளேற ஏற அவர்களுடைய வேலைக்காரர்களும் ஒருவரோடொருவர் பேசிக்கொள்வதை யும் நிறுத்திக் கொண்டார்கள்.

இவ்விதம் மந்திரிகளிருவரும் பேசாமல் கலகத்திலீடு பட்டிருந்தமையால், அந்நகரம் எந்நலமும் பெற்று அழகு வாய்ந்திருந்தும், அழகற்றது போல் விளங்கிற்று. மந்திரிக ளுக்குள் கலகம் ஏற்பட்டு ஒருவரோடொருவர் பேசாமலி ருப்பதை அரசன் அறிந்து நடு நிலைமையிலிருந்து கொண்டு அம்மந்திரிகளுக்கு நல்லுபதேசங்களைப் போதித்து கலக

யில்லாமல் இருக்கும்படிச் செய்தான். மந்திரிகள் மன்னவன் சொற்கேட்டு அதன்படி யடங்கி ஒருவருக்கொருவர் பகைமை பாராட்டாம லிருந்தார்களில்லை. மந்திரிகளின் கலகத்தின் பயனாக அந்நகரத்திலுள்ள ஜனங்கள் ஜயபாலன் சார்பில் சிலரும், தனபாலன் பக்கத்தில் சிலரும் சேர்ந்து கொண்டார்கள். இரண்டு பிரிவுகள் ஏற்பட்டு சின்னாட்கள் சென்றதும் இரண்டு கட்சிக்காரர்களுக்கும் கலம் அதிகரித்து அந்நகரம் போர்க்களமாக விளங்கிற்று. அதுபோழ்து, அந்நகரத்திலுள்ள அறிவிற் சிறந்த பெரியோர்கள் கலகம் செய்யா தொற்றுமையாக விருக்கும் வண்ணம் சமாதானஞ் செய்தும், அம்மந்திரிகள் இருவரும் பெரியார்களின் சமாதானத்தைச் செவியேற்று மேலும் மேலும் கலகத்தை விளைவிக்காது வாளாயிருந்தார்க ளில்லை. ஒருவர் சொல்லையும் கேளாமையால் மீண்டும் சமாதானம் செய்துவைக்க ஒருவரும் முன்வரவில்லை.

ஒரு காலத்தில் பூரணச் சந்திரன் பிரகாசத்தோடு விளங்கினான். பனிக்காலம் இல்லாதபடியால் உத்யான வனத்தின் ஓடைகளில் ஆம்பல் மலர்கள் மலர்ந்திருந்தன. வெய்யிற் காலம் வராதபடியால் பசும் புற்கள் பச்சைப் பசேலென்று இருந்தன. அதி செழிப்பாய் வளர்ந்து பூத்துக் காய்த்துக் குலுங்கி இருந்த மரம், செடி, கொடிகளெல்லாம் கண்டோர் மனதைப் பரவசப் படுத்தின.

இவ்விதம் இருக்கும் நாளில் ஜயபாலன் கட்சியைச் சார்ந்தவர்கள் பல பெண்மணிகளுடன் ஓர் விருந்துக் கச்சேரி நடாத்துவதற்காக தங்களின் தலைவனைக் கூட்டிக் கொண்டு நந்தவனத்திற்கு வந்துக் குழுமினார்கள்.

ஆங்கு அழகமைந்த அரிவையர்களைப் பார்ப்பதற்குச் ஜனங்கள் வந்து குழுமியது ஓர் ஆச்சரியமல்ல! பெண்கள் கூட்டத்தைப் பார்ப்பதற்கு ஜனங்கள் வந்து கூடுவது உலகியல்பன்றோ? மேலும், காதல் மிக்குற்று, மாதர் மாய்கையில் சிக்குண்டோர்கள், இது செய்யத்தக்கது, இது செய்யத்தகாதது என்று யோசிப்பது அரிது! இத்தகைய விஷயத்தில் காதலர்கள்மீது குறை கூறுவதற்கு நியாயமில்லை. அக்கூட்டத்திலுள்ள புருடர்கள் விசேஷமாகப் பெண்களையேப் பார்த்த வண்ணமா யிருந்தார்கள். அக்கூட்டத்திலே செல்வராஜன் என்னும் வாலிபனொருவன் தனது சிநேகிதர்களாற் றூண்டப் பெற்று விருந்துக்கழைக்கப் படாதவனாயினும், ஒரு நண்பனை துணை கொண்டு தனது உருவை மாற்றி மாறு வேடம் பூண்டு விருந்து நடக்கும் நறுமணங் கமழும் நந்தாவனத்திற்கு வந்து சேர்ந்தான்.

'மனிதன் தன் மனம் விரும்பியவாறு ஒரு காரியத்தைச் செய்ய முயற்சி யெடுப்பினும், பெரும்பாலும் தன் மன விருப்பத்திற்கு மாறான பலனையே பெறுகின்றான்' என்பது யாவரும் நன்கு அறிந்த விஷயமாகும்!

செல்வராஜன் நண்பனாகிய குணசாகரன் என்பவன் செல்வராஜனுக்கு முதன் முதலில் நிச்சயிக்கப்பட்ட பெண் மணியான கங்காபாய் என்பவள் அவனுக்குத் தக்க மனையாளல்லவெனத் தீர்மானித்து அம்மாதினிடத்துப் பற்றுள்ள தன் தோழனான செல்வராஜன் மனதை அழகுமிக்க மாதரால் திருப்ப எண்ணங்கொண்டு, பெண்மணிகள் குழுமி இருந்த நந்தவனத்திற்கு அழைத்து வந்தான். செல்வராஜன் தனபாலன் கட்சியைச் சேர்ந்தவனாகையால்,

பகைவர் கூட்டத்தின் மத்தியில் தன் சிநேகன் ஒருவனைத் துணையாகக் கொண்டுபோவது மிகுந்த ஆபத்துக் கிடமாகும் என்பது வாசகர்களுக்கு நாம் சொல்லாமலே விளங்கும். ஆயினும், பெண்கள் கூட்டத்தைக் கண்டுகளிக்க காதல் கொண்டிருந்தமையால் பகைவரால் ஆபத்து நேருமென்று அவர்கள் யோசிக்கவே யில்லை.

அமுர்தத்தை வருஷிக்கும் சந்திரக்கிரணங்களாற் பூமி எங்கும் வெள்ளியைப்போல் வெள்ளை வெள்ளேறென்று வெளுத்திருந்தது. பூங்காவினுட் கூடியிருந்த ஜனங்கள் யாவரும் உத்யான வனத்தி னழகையே கவனித்துப் பார்த்துக் களிப்புற்றிருந்தனர். ஓரிடம் பொய்கைகளில் புதிதாக மலர்ந்திருக்கும் ஆம்பல் மலர்களி னழகைப் பார்த்துக் களித்தனர். வெண்மை நிறம் பொருந்திய வம்மலர்களில் கறுப்பு நிறம் பொருந்திய வண்டுகள் சூழ்ந்திருப்பது, 'நல்லோர், தீயோர்' நடத்தையை விளக்குவது போலிருந்தது! மற்றுமோரிடம் மேடைகளின் மீது இளம்புற்கள் மூடியிருப்பதானது பாரசீகத்துக் கம்பளத்தால் மறைக்கப் பட்டதுபோல் விளங்கிற்று! அதன் அழகைச் சீர்குலையச்செய்யக்கூடாதென்றெண்ணி வேறுவழியாகச் சென்றூர்கள்பலர். இன்னுமோரிடம் அவ்வழகிய நந்தவனத்தைச் சுற்றிப்பார்த்தக் களைப்பினுல் நந்தவனத்தின் மத்தியில் அமைக்கப்பட்ட வழகிய மஞ்சங்களி லமர்ந்து செவிக்கினிய பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தனர். வேறோரிடம் மரக்கிளைகளிலிருந்து கீழே தொங்குமாறு அமைக்கப்பட்ட பலகணைகளிலிருந்தமர்ந்த நாரீமணிகள் ஒருவருக்கொருவ ரினிமையாகப் பேசியாவரையும் மயங்கச் செய்தனர்.

இதனிடையே மாறுவேடம் பூண்ட செல்வராஜனும், அவனது நண்பன் குணசாகரனும் ஜயபாலனின் பிரதிநிதிகளால் நன்கு வரவேற்கப்பட்டனர். அப்பிரதிநிதிகள் தக்கவாறு க்ஷேமாதிசாரங்களை விசாரிக்கலாயினர். அதன்பின்னர் அவ்வதிகாரிகள் செல்வராஜனையும், அவனது நண்பன் குணசாகரனையும் நோக்கி "நீங்கள் இந்நந்தவனத்தை யுங்கள் விருப்பம்போல் சுற்றிப்பார்த்து விளையாட்டாகக் காலங் கழிக்கலாம்" என்றூர்கள்,

ஜயபாலனின் பிரதிநிதிகள் அன்புபொருந்திய உத்திரவளித்த உடன் செல்வராஜனும், குணசாகரனும் விளையாட்டுக் குழந்தைகளைப்போல வந்நந்தவனத்தைச் சுற்றிப்பார்க்கப் புறப்பட்டார்கள்.

பற்பல பெண்மணிகளைக்கண்டு மயங்கிய மனத்தராகிய அவ்விருவரும் ஓரிடம் பெண்கள் ஊஞ்சலாடுவதையும், வேறோரிடம் வீணை முதலிய வாத்தியங்கள் வாசிப்பதையும், மற்றோரிடம் நாட்டியப்பெண்களுக்கு ஆட்டங் கற்றுக்கொடுப்பதைப்போல் நடனம் புரிவதையும் கண்டு களித்தனர்.

செல்வராஜன் அழகிய பெண்மணிகளையேப் பார்ப்பதில் பேரவாக் கொண்டோனாதலின், நந்தவனத்தில் கூடியிருந்த பெண்கட் கூட்டத்தினடுவில் வடிவாம்பாள் என்னும் பெண்மணியைப் பூரணச் சந்திரனைப்போல் விளங்கக் கண்டான். அவள் பல பெண்மணிகளாகிய மாலைக்கு நாயகமணியாகவும், தனது அழகின் மிகுதியால் தெய்வப்பெண்களை வென்றவளாகவும், தனது முகத்தின் பிரகாசத்தால் சந்திரனைப் பழிப்பது போலவும், ஒருருவில் மூன்று உலகத்

தழகையும் சேர்த்துக் காண விரும்பிப் பிரமதேவனுல் படைக்கப்பெற்ற பெண் இரத்தினம் இவள்தானே என ஜனங்களால் எண்ணப்பட்டவளாகவும், பூமியில் பெறுதற்கரியவளாகவும், அழகுக்கெல்லாம் அழகாயும் விளங்கினுள்.

வடிவாம்பாளின் முக அழகைக்கண்ட செல்வராஜன் "இது இவ்வழகிய நந்தவனத்தினுள் உலாவ கீழே இறங்கி வந்திருக்கும் சந்திரனே? அல்லது மேகமின்றி தனித்திருக்கும் மின்னற் கொடியோ? அல்லது கூதிர்கால வனப்பைக்காண விரும்பிய சூரியன் தனது உஷ்ணக்கிரணங்களால் நந்தவனத்தினழகு குன்றுமென்று எண்ணித் தன் வெப்பத்தைத் தணித்துக்கொண்டு இங்கு வந்திருக்கின்றானே? இன்றேல், உரோகினி நாயகனுன சந்திரன் நம்மை அவமதிக்கின்ருனென்று சக்களத்திமார் மீது கோபத்தினுல் நக்ஷத்திரங்களெல்லாம் ஒன்று சேர்ந்து உலகத்தில் படைத்திருக்கும் மற்றொரு சந்திர-பிம்பமோ? இந்நங்கையைப்போ லிவ்வுலகத்திற் காணக்கிடைக்குமோ? இம்மாதை மணம்புரியும் புண்ணியன் யாவனே? இவளை மணம்புரிபவ னன்றோ புண்ணிய புருடன்" என்று எண்ணி வருந்திச் சிந்தித்து, வெட்கத்தை யறவே யொழித்து வடிவாம்பாளின் மேற் செலுத்திய பார்வையிலிருந்து தனது கண்களை யெடுக்க மனமில்லாதவனுய் அவளையேப் பார்த்த வண்ணமா யிருந்தான். அது சமயம், செல்வராஜனின் நண்பனுன குணசாகரன் மூவுலகத்தையும் வென்ற காமனுனவன் நமது நண்பன் செல்வராஜனை வென்றது அரிதன்றெண்ணி நண்பனைத் தனியே விடாமல் பின்றொடர்ந்து நின்றுன்.

குணசாகரன் தன் நண்பன் செல்வராஜன் பைத்தியம்

பிடித்தவனைப் போலவும், மாதர் மயக்கத்தால் மதிமயங்கித் தியங்கி இருப்பதையும், அவனால் தானும் குற்றவாளியாக வேண்டுமென்பதையும் நினைத்து, வடிவாம்பாளின் சகோதரனாகிய தியாகராஜன் அங்கே இருப்பதால் எங்ஙனம், பகைவரால் அவமானமாடைய நேரிடுமோ வென்று அஞ்சி, நண்பனை யக்கூட்டத்திலேயே விட்டுவர மனமில்லாதவனாய்ப் பலவாறு நண்பனுக்குப் புத்திப் புகட்டலானான்

நண்ப! செல்வராஜ்! "நற்குலத்திலுதித்து, பலகலையுங் கற்றுணர்ந்த நினக்கு, பணியாளனைப்போன்ற யான் நற்புத்தி சொல்லிக் கொடுப்பது, பாலன் பாட்டனுக்கு உபதேசம் செய்வது போலாம்."

தவிரவும், "இவர் உறவினர், இவர் நண்பர், இவர் நல்லவர், இவர் கெட்டவர், இவர் பகைவர் என்பதைக் கொஞ்ச அறிவுள்ள யான் உனக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். யான் சொல்லும் சொற்கள் சொற்பமாயினும், மனிதனைக் கெட்ட வழியினின்று அகற்றவல்லதாகும். அதை விவரமாகச் சொல்கிறேன் கேள்" என்று சொல்லத்தொடங்கினான்.

நண்ப! செல்வராஜ்! "நீ முதலில் கங்காபாய்க்குக் கொடுத்த சொல்லுறுதி எங்கே போயிற்று? அதை நீ மறந்து விட்டாயோ? குலத்தினுயர்வைக் கருதாமல் தற்செயலாய் நந்தவனத்திலே, பெண்கள் கூட்டத்திலே, இப்பெண்ணைக் கண்ட மாத்திரத்திலே உன் மனம் மாறியதென்னே? நீ முன் கங்காபாய்க்கு வாக்குக் கொடுத்திருப்பதை மாறி நடப்பது தகுதி யல்லவே! நீ இதுபோழ்து இந்நந்தவனத்தின்கண் கண்டு காதலித்தப் பெண் பகைவர் மரபிலுதித்தவளாதலின்,

அப்பெண் தகுதியல்ல வென்பதை நீ கொஞ்சமும் யோஜிக் காத தென்ன? கங்காபாயினிடமிருந்து என் மனதை எவ ராலும் திருப்பமுடியாது என்று நீ முன்னர் கூறியவார்த்தை எங்கே போயிற்று? இந்நந்தவனத்தில் வடிவாம்பாளாகிய இப் பெண்மணியைப் பார்த்த உடனே மதியங்கிய தென்னே! என்னே!!"

"காமியானவன் விகாரமானப் பெண்ணைப் பார்த்த மாத்திரத்திலேயே மன்மதன் காதலியான இரதிதேவியாக நினைக்கின்றான்" என்று மொழிந்த பெரியார் வாக்கு நினை விற்கு வருகின்றது. அது உன்பால் காண நான் மிகவும் ஆச்சரியப்படுகிறேன். இனி நீ இந்நந்தவனத்திலி நுக்காமல் வெளியே வரவேண்டும் என்று சொல்லி நண்பன் சொல்லும் பதிலை யாவலுடன் எதிர்பார்த்திருந்தான்.

அதுபோழ்து நடு இரவு ஆகிவிட்டபடியால் யாவர் மனதையும் மகிழ்விக்கும் சந்திரன் மறு உலகத்தாரை மகிழ் விப்பதில் முயற்சியுள்ளவனானன் ஜனங்கள் பகலில் வேலை செய்த களைப்பின் மிகுதியால் யாவரும் நித்திராதேவியைக் கொண்டாடினார்கள். எங்கும் நிச்சப்தமாயிருந்தது. அது சமயம், வடிவாம்பாளின் தோழிப்பெண்கள் அவளைத் தாயார் அழைத்ததாய்த் தெரிவித்தார்கள். உடனே வடிவாம்பாள் செல்வராஜனிடம் தன் பார்வையைச் செலுத்தியபடியே தன் தோழிகளுடன் மெல்ல மெல்ல தன் மாளிகைக்குச் செல்ல லானாள். அங்ஙனம், செல்வராஜனும் தன் நண்பன் குணசா கரன் போதித்த நன்மொழிகளைச் சிறிதும் பொருட்படுத்தா மல் வடிவாம்பாளையே தன் மனதிலுருவகப்படுத்தி யவ ளைப் பின்றொடர்ந்துச் சென்றான்.

வடிவாம்பாள் செல்வராஜனைப் பின்றொடர்ந்து வருமாறு பலவித சைகைகளைக் காட்டிக்கொண்டு செல்வராஜனைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்றாள். இவ் விதம் இருவரும் ஒருவர்மேலொருவர் காதல்கொண்டு வடிவாம்பாளின் மாளிகைக்குச் சென்றார்கள். மாளிகைக்குச் சென்றதும் வடிவாம்பாள் தன் தோழிப்பெண்களை யனுப்பி விட்டுத் தான் காதலித்த செல்வராஜனைப் பார்ப்பதற்காக மாளிகையின் மேலேச்சென்றாள். செல்வராஜனும் கோடிசூரியப் பிரகாசம்போல் விளங்காநின்ற மாளிகையில் அழகுமிக்க வடிவாம்பாளைப் பார்க்கப் போவாக்கொண்டு அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தான்.

"காமத்திலீடுபட்டவர்களுக்கு இரவுமில்லை; பகலுமில்லை; வெய்யிலு மில்லை; மழையு மில்லை; அச்சமு மில்லை; வெட்கமு மில்லை; பெரியோரிடம் பக்தியு மில்லை; நன்மை தீமையும் தோன்றுவ தில்லை" என்பது செல்வராஜனிடம் இல்லாமலிருந்தது ஓர் ஆச்சரியமல்ல! வடிவாம்பாளின் வதனத்தைக் காணவிரும்பிப் பைத்தியம் பிடித்தவனைப்போல அங்கு மிங்கும் அலையும் செல்வராஜனைப் பார்த்துக் கொண்டே யிருந்தாள் வடிவாம்பாள்.

பின்னர், காதல் என்னும் தோட்டத்தில் ஆசை என்னும் புஷ்பம் பூத்து வடிவாம்பாளை மன்மதன் கணைக்கு ஈடு படுத்தியது. செல்வராஜனைக் காட்டிலும் வடிவாம்பாள் பன்மடங்கு காதல்கொண்டு அவனையே அடிக்கடிப் பார்த்துப் பார்த்து மயங்கி நின்றாள். மந்திரக்காரனிடம் வசப்பட்ட பாம்பைப்போல செல்வராஜனிடம் தன் முழு மனதையுஞ் செலுத்தினாள். பொழுது போயிற்று. சந்திரன்

ஆகாயத்திலிருந்து மறைவதுபோல் செல்வராஜனும் மதன வேதனையால் பீடிக்கப்பட்டவனுய் அவ்விடத்தை விட்டு அகன்றுன்.

இரண்டாவது அத்தியாயம்

கீழ் திசைக்கு அணிகலனுகிய சூரியபகவான் உதயகிரிச் சிகரத்திலேறியவனுய், உதய காலத்திற் பாடி எழுப்பும் வந்தியைப்போல பறவைகளின் குரலோசையால் வைகறையி லுலகத்தாரெழுந்தார்கள். அருணேதயமாகவே நட்சத்திரங்கள் ஒவ்வொன்றுய் மெல்ல மெல்ல மறையலாயின. மரம், செடி, கொடிகளெல்லாம் தெளிவடைந்து விளங்கின.

'மன்மதன் கணைக்கிலக்கானவன் உன்மத்தனுகவும், கற்பனு ரூபமான சரீரமுள்ளவனுகவும் ஆகின்றுன்' என்று மூதறிஞர் மொழிந்ததற்கேற்ப, செல்வராஜன் காலைக்கதிரவனெளியால் காணப்படும் பொருட்களெல்லாம் சிவந்திருப்பதைக் கண்டு, ஆ! எனக்குற்ற காதலன்றே காணப்படும் பொருட்களெல்லாம் சிவந்த உருவத்துடன் காணப்படுகின்றன? அல்லது காமலைக் கண்ணனைப் போல் காதலில் சிக்குண்ட என் கண்ணுக்குக் காணும் பொருட்களெல்லாம் சிவந்த மேனியாகத் தோன்றுகின்றதோ?'' என்று பற்பலவாக எண்ணிக்கொண்டு வடிவாம்பாளை விட்டால் வேறு மாதரால் மதன சுகம் அனுபவிக்கமுடியாது என்றெண்ணி ஏங்கித் திகைத்திருப்பதை யுணர்ந்தான் குணசாகரன். செல்வராஜ

னின் மாதர் மோகாவவஸ்தையைக் கண்ட குணசாகரன், "இவனுக்கு மாதர் மோகம் சரியாய்த் தலைக்கேறி விட்டது. இனி நாம் இவனைத்தனிமையாய் விட்டுப்போவது தகுதியல்ல. மேலும், இவன் காதலித்தப் பெண் பகைவர் மரபிலுதித்தவ ளாதலால், அவள் இவனுக்குக் கிடைப்பதும் அரிதாகும். ஒருக்கால் கிடைத்தாலும் ஆபத்து நேரிடு" மென்று எண்ணி செல்வராஜனை விடாமல் பின்றொடர்ந்து நின்றான். செல்வ ராஜன் மாதர் மோகத்தால் சூரியபகவானின் வெப்பத்தை யும் பாராட்டாமல் ஸ்திரீலோலனாய் அங்கு மிங்குமலைந்துத் திரிந்து பகற்பொழுதைக் கழித்தான்.

இஃதிங்ஙனமிருக்க, வடிவாம்பாள் நந்தவனத்தில் செல்வராஜனைக் கண்டது முதல் அவன்மேல் நீங்காத காதல் கொண்டு, ஆடையாபரணங்களிலாசையின்றி, ஊணுறக்க மின்றி செல்வராஜனையே நினைந்து, மனங்கசிந்து மன்மதன் கணைக்கிலக்காகி நின்றாள்.

வடிவாம்பாளின் தோழிகள் அவளது நிலைமையை யுணர்ந்து "அடி நங்காய்! உன் அங்கமெல்லாம் இவ்விதம் வாட்டமுற்று மனம் வருந்தக் காரணமென்ன?" என்று வினவினார்கள். அத்தோழிப்பெண்கள் அவ்விதம் வற் புறுத்தி வினவவே அப்பெண்களைத் தன்னிடம் வராவண் ணம் சொல்லியனுப்பி விட்டுத் தனிமையாக விருந்து செல்வ ராஜனையே சிந்தித்த வண்ணமா யிருந்தாள்.

வடிவாம்பாளைப் பெற்றோர் தோழிகள் மூலமாய் வடி வாம்பாளின் நிலைமையை யுணர்ந்து "நம் அருமைப் புதல் விக்கு இவ்விதம் மனக்கவலை நேரயாது காரண"மென்று

எண்ணி அதுசமயமே வடிவாம்பாளிருக்கும் மாளிகைக்கு வந்து, "குழந்தாய்! நீ வருத்தமுற்றிருக்க யாது காரணம்?" என்று வினவினார்கள். பெற்றோர்கள் அன்புடன் பலமுறை வற்புறுத்திக் கேட்டும் வடிவாம்பாள் அச்சத்தாலும், நாணத்தாலும் யாதொரு பதிலும் சொல்லவில்லை. அங்ஙனம், அவளைப் பெற்றோர்கள், "நாம் இதுநாள்வரைத் தக்கக் கணவனுடன் சேர்த்து வைக்கவில்லை யல்லவா? அதனாலன்றோ இவளுக்கு இவ்விதம் மனக்கவலை யுண்டாயிற்று போலும்! ஆகையால், இனி நாம் இவளுக்குத் தக்கக் கணவனைத் தேடி மணஞ்செய்து வைப்பதே நல்லது. அப்பொழுதுதான் இவள் மனக்கவலைத் தீர்ந்து சந்தோஷமாக யிருப்பாள்" என்று தீர்மானித்து அவ்விடம் விட்டு தங்கள் மாளிகைக்குச் சென்றார்கள்.

செல்வராஜனைக் காதலித்து அவன்பால் மனதைச் செலுத்தி வருத்தமுற்றிருந்த வடிவாம்பாள் தன்னைப் பெற்றோர்கள் தான் காதலித்த செல்வராஜனைத் தவிர்த்து, வேறு கணவனைத் தேடிவைக்கப் போகும் விஷயத்திற்கு என் செய்வதென்று எண்ணி எண்ணி மனம் வருந்திக் கொண்டிருந்தாள். மேலும், அவள் தன் காரியங்கள் எவற்றினும் பற்றில்லாதவளாய்; தோழிப் பெண்கள் பன்முறை வருந்திக் கேட்டும் தன்னுடைய மனத்திலுள்ள எண்ணத்தைக் கூறாதவளாய்; சித்திரப் பதுமைபோலிருந்து மிகவும் வருத்தத்துடன் அப்பகற் பொழுதைக் கழித்தாள்.

ஆகாயமெல்லாம் நிர்மலமாய் இருந்தது. சூரியன் சிவந்த மேனியோடு அஸ்தகிரியின் சிகரத்தில் ஏறினான். பறவைகள் பகல் முழுதும் அலைந்து திரிந்து தேடிய உணவு

களைத் தத்தம் குஞ்சுகளுக்குக் கொடுக்கக் கூட்டை நோக்கிச் சென்றன. பொருள் தேடுவதற்காக வெளியே சென்றிருந்த புருடர்கள் வீட்டுக்கு வரும்போது காதலிகள் அன்புடன் முகமன்கூறி வரவேற்று உபசரித்தனர். சந்திரபகவானும் உதயகிரியில் மெல்ல மெல்ல ஏறலானான். சந்திரோதயமாக இருள் நீங்கிற்று. மன்மதன் கணைக்கிலக்கான செல்வராஜன் சந்திரன் உதயமானதைக் கண்டு மகிழ்ந்து வடிவாம்பாளைப் பார்க்க ஆவல் கொண்டு ஜயபாலன் மாளிகையை நோக்கி விரைந்து நடந்து போனான்.

செல்வராஜன் நந்தவனத்துட் சென்று முன்னே பார்த்துப் பார்த்துப் பழக்கமுள்ள சாளரத்தினருகே நின்றுகொண்டிருந்தான். அப்பொழுது காதலிற் சிக்குண்டு மனந் தடுமாறிய வடிவாம்பாள் காதலனாகிய செல்வராஜனை நினைத்து உரத்தகுரலோடு புலம்பலானாள். அதைச் செல்வராஜன் செவிக்கமுதமாய்க் கேட்கலாயினன்.

வடிவாம்பாள் செல்வராஜனை நினைத்துப் புலம்பல்

"ஆ! என்னுருயிர்க் காதல! அழகிய மேனியுள்ள செல்வராஜ்! உம்மிடம் என்மனம் உறுதியாய்ப் பதிந்து விட்டது! இனி உம்மைவிட வேறு புருஷர்மேல் என்மனம் செல்லாது! நீரோ எமது பகைவரான தனபாலன் கக்ஷியைச் சேர்ந்தவர். ஆகவே, நான் உம்முடன் எவ்விதம் சேர்வேன்! நீர் பகைவர் கூட்டத்திலுள்ளவராகையால் நாம் காதலித்தது பாழாய் விடுமே! என் செய்வது! அந்தோ! ஈசா! ஏழை பங்காளா! எண்ணினோர்க்கு எண்ணியாங் களிக்கு மிறைவ! என்னுயிரினுஞ் சிறந்த செல்வராஜ்! நான் நினைக்கிறபடியே

நீர் என்னிடம் காதல் கொண்டிருப்பது உண்மையானல், நீர் உமது குலத்தைவிட்டு மாறிவிடவேண்டும், இல்லாவிடில், நான் உமக்காக என் குலத்தை விட்டுவிலகிக் கொள்கிறேன். அப்பொழுது நாம் நினைத்தகாரியம் நிறைவேறும்'' என்று பலவாறு புலம்புகையில், கீழே காதலனுகிய செல்வராஜனைப் பார்த்தாள்.

செல்வராஜன் இவள் இன்னும் நம்மீது எவ்வளவு அன்பு வைத்துப் பேசுகின்ருள் பார்ப்போம் என்று உயரப்பார்க்கை யில் வடிவாம்பாளைக் காணவில்லை.

வடிவாம்பாள் காதலனுகிய செல்வராஜனின் பிரிவை யாற்ருது மாளிகையினின்றும் கீழே இறங்கிவந்து நந்தவனத் துட் சென்று செல்வராஜனிடம் அன்பு செலுத்தி இன்பக் கடலில் ஆழ்ந்திருந்தாள்.

அழகிய நந்தவனத்துள் காதல ரிருவரும் சந்தித்து நல் லுரை யாடினர். பின்னர் இருவரும் இனிமேல் நடக்க வேண்டிய விஷயத்திற்கு என் செய்வதென்று பலவாறு எண்ணி முடிவாக "காந்தருவமணம் இருவரும் தனிமையில் செய்துக்கொள்ளவேண்டும்'' என்று செல்வராஜன் நிச்சயித் தான்.

அப்பொழுது வடிவாம்பாள் செல்வராஜனைப் பார்த்து, "என்னருங்காதல! நாம் யாவரும் அறிய மணஞ்செய்துக் கொள்ளல் வேண்டும்! நீர் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து அவ்வப்போது சேடிவாயிலாகத் தெரிவிக்க வேண்டும்!'' எனக்கூறியுள்ளே சென்ருள்.

பின்னர் செல்வராஜன் அதிவிரைவில் "எங்களிருவரை

யும் சேர்த்து வைக்க வேண்டு மென்று எல்லாம் வல்ல பார்வதி மணாளனை" வேண்டினன். பொழுதும் புலர்ந்தது. அந்நந்தவனத்தை விட்டு வெளியேச் சென்றான்.

வடிவாம்பாளைப் பிரிந்த செல்வராஜன் நேரே வீட்டிற்குப் போகாமல் நாம் காதலித்த இக்காரியம் எவ்விதம் முடியப் போகிறதென்று சிந்தித்துப் பலவாறு யோசித்தான். அப்பொழுது அவன் மனதில் திடீரென்று ஓர் எண்ணம் உண்டாயிற்று. அதாவது, அமிர்தபுரியிலுள்ள நமது குல குருவா ஞானசூரியர்தான் நமக்கு இந்த விவாகமஹோற்சவத்தை நடத்திவைக்கக்கூடும் என்று அவரிடம் சென்றான்.

செல்வராஜன் பொழுது புலர்ந்து இருட்டாக இருப்பதையும் பொருட்படுத்தாமல் தங்குல குருவாகிய ஞான சூரியரிடம் போய்ச் சேர்ந்தான். ஞான சூரியர் தன்னிடம் செல்வராஜன் அக்காலத்தில் வந்ததால் ஆச்சரியமும், ஆனந்தமும் கொண்டவராய், "இவன் வருந்திய மனத்துடனும், கலங்கிய கண்களுடனும், நடுநிசியில் எதற்காக நம்மிடம் வந்திருக்கின்றான்? இவன் இவ்விதம் வந்ததற்குக் காரணம் யாதோ? இவன் காதல் கொண்டிருக்க வேண்டும். காதலே இவனைத் தூங்காமல் நடு இரவில் இங்கு வரச் செய்தது போலும்! காதல் வயப்பட்ட வாலிபப் புருடனுக்கு இது குற்றமாகத் தோன்றாது. இளமைப் பருவமே அறியாமைக்கு இருப்பிடமாகவும், குற்றங்களுக்கு உறைவிடமாகவும், கொடுஞ் செய்கைகளுக்குக் காரணமாகவும் இருக்கிறது. காதல் பைத்தியம் கொண்டவர்களுக்கு இரவு பகலாகத் தோன்றும். சூரியனும் சந்திரன் போலத் தோன்றுவான்.

நன்மை தீமை இன்னதென்று விளங்காமல் ஒரு காரியத்தில் பிரவேசிப்பார்கள். ஆனால், அறிவு மிகுந்த நமது செல்வ ராஜனிடம் அவ்விதமிருக்காது. அவன் வேறு காரியமாகவே நம்மிடம் வந்திருக்க வேண்டும்'' என்று எண்ணித் தன்னிடம் அதிகப் பிரீதியோடு வந்த செல்வராஜனை நோக்கி ''நீ என்னை நாடிவந்த வேலை என்ன? என்று வினவினர்.

அங்ஙனம், செல்வராஜன் ''நற்குணம் வாய்ந்த நல்லா சிரிய! பகைவனுகிய தனபாலன் பெண்ணுகிய வடிவாம்பாள் என்னை உண்மை நிறைந்த மனத்துடன் கணவனுக ஏற்றுக் கொண்டாள். ஆகவே, எங்களிருவர் மனங்களிக்கத் தாங்கள் விவாகம் சீக்கிரத்தில் முடித்து வைக்க வேண்டும்!'' என்று மிகவும் வணக்கத்துடன் கூறினன்.

இவ்வார்த்தையைக் கேட்ட ஞானசூரியர் சற்று ஆலோசித்து அன்பு மிக்குற்ற இவ்விருவருக்கும் மணவினை நிகழு மானல், தனபாலன் ஜயபாலன் ஆகிய இருவருக்கும் நீண்ட காலமாக உள்ள பகைமை நீங்கும் என்று மகிழ்ந்து, ''இத் திருமணம் இனிது நிறைவேறட்டும். இக்கலகத்தை யொழிப் பதற்காக இத்தம்பதிகளுக்குப் புத்திர பாக்கியங்களுமுண் டாகட்டும். எல்லோரும் க்ஷேமமாக வாழட்டும்'' என்று வாழ்த்தி, ''நான் இக்கலியாணத்தைச் செய்து வைப்பதற் குரிய காரியங்கள் எல்லாவற்றையும் சீக்கிரத்தில் செய்து முடித்து வைக்கிறேன்! நீ வீட்டிற்குள் வா'' என்று சொல் லிச் செல்வராஜனை உள்ளே அன்புடன் அழைத்தார்.

இருவரிடமும் மெய்யன்பு கொண்ட ஞானசூரியர், செல்வராஜன் முதன் முதல் காதல்கொண்ட கங்காபாய்'

என்பவளை மறந்து, பின்னர் 'வடிவாம்பாள்' மீது காதல் கொள்ளக் காரணம் யாதோ என்று சந்தேகப்பட்டு, செல்வ ராஜனைப் பார்த்து, அன்ப! "நீ வடிவாம்பாளை எங்ஙனம் எவ் விதம் பார்த்தாய்? நீ முன் பாக கங்காபாயை காதலித்ததை மறந்து, பின் வடிவாம்பாளை காதலித்ததற்குக் காரணம் என்னை? பகைவர் குலத்திற் பிறந்த வடிவாம்பாள் உயர்குல மாயினும் கீழ் குலத்தில் பிறந்தவளைப் போலல்லவா பாவிக்க வேண்டும்? அவளை எவ்விதத்திலும் காதலிக்கக் கூடியதல் லவே என்பதை நீ அறியாது காதல் கொண்ட தென்னே! நீ காதலித்த வடிவாம்பாளைக் கடிமணஞ் செய்வது எவ்விதம் முடியும்?" என்று கேட்டார். அதற்கு செல்வராஜன் பின் வருமாறு விடையளித்தான்.

குருநாதா! "காதல் மிகுந்துள்ளவர்கள் நன்மை தீமை களைப்பற்றிச் சிறிதும் யோசிப்ப தில்லை என்று பெரியார் கூறியிருப்பது தாங்களறியாததல்ல. ஆகவே, இவ்விஷயத் தில் என்மீது சிறிதும் பிழையில்லை. காதல் உண்டானபோது இது தக்கது; இது தகாதது என்று எண்ணுவதில்லை. நான் முன்பாக கங்காபாயைக் காதலிக்க வில்லை. நான் காதலித்த தாக தாங்கள்தான் சொல்கிறீர்கள். யௌவனப் புருடர் களுக்குச், சிறுமியர்மீது சிந்தை செல்வது அன்பினாலேயே யல்லாமல், வனப்பினாலன்று. ஆதலால், என்மீது வடிவாம் பாள் அவ்வளவு மெய்யன்பு கொண்டுளாதலின் அவளையே எனக்கு வதுவைசெய்து வைக்கவேண்டும்" என்று சொல்லிக் கொண்டு அவர் பதில் மொழியை ஆர்வத்துடன் எதிர்பார்த் திருந்தான்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட ஞானசூரியர், செல்வராஜ

னுக்கு உண்மையிலேயே காதல் முற்றிவிட்டது என்றுணர்ந்து, செல்வராஜனைப் பார்த்து, அன்ப! "நீ காதலித்தப் பெண்மணியை இன்று மாலையில் காந்தருவ முறைப்படி உங்களிருவருக்கும் விவாகம் செய்துவைக்கின்றேன். அதன் பின்னர் ஏதாவது இன்னல் நேருமானால் அதுபோழ்து வேறு எவ்விதத்திலேனும் இது விஷயத்தை தெரிய விளக்கி வைக்கிறேன். இன்று மாலையில் நீ காதலித்தப் பெண்மணியுடன் மலைமீதிருக்கும் ஈஸ்பரன் கோயிலுக்கு வந்து சேருங்கள்!" என்று கூறினார்.

அங்ஙனம் அவ்விதம் சொல்லி வாய்மூடு முன்னே ஒரு பெண்வந்து, ஐயா! "தங்கள் காதலி வடிவாம்பாள் தங்களிடமிருந்து சமாச்சாரம் அறிந்துகொண்டு வருமாறு என்னை அனுப்பினு" ளென்று சொன்னாள். அதைக்கேட்ட செல்வராஜன் அம்மணி! "வடிவாம்பாளை இன்று மாலை இங்குவரச் சொல்லும்" என்று சொன்னான். அவ்விதமே அப்பெண் வடிவாம்பாளிடம் சென்று "இன்று உன் காதலன் மாலைப் பொழுதில் அவடம் வரச் சொன்னார் என்று சொன்னாள். அவ்வார்த்தையைக் கேட்ட வடிவாம்பாள் அடங்கா மகிழ்ச்சியுற்று மாலைப் பொழுது எப்பொழுது கிட்டும் கிட்டும் என்று எதிர் பார்த்திருந்தாள்.

செல்வராஜனும் தங்குல குருவாகிய ஞானசூரிய ரிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்து மாலைப்பொழுது எப்பொழுது வரும் என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டும், காதலி வடிவாம்பாள் வருகையையு எதிர்பார்த்துக்கொண்டு மிருந்தான்.

மூன்றாவது அத்தியாயம்

"காதலர்க்குக் காலம் வளரும்" என்பது போலவும், 'காதலர்கள் விருப்பம்போல் எதுவும் நடப்பதில்லை' என்பது போலவும், ஆயினும் 'காதலர்க்கு ஆசை குறைவது யில்லை' என்பது போலவும் இக் காதலர்கள் பால் காணப்பட்டது.

பாலைவனத்தைக் கடப்பவன் கானலை நீரென்றெண்ணித் தொடருவான். அப்பொழுது அவனுக்கு நீர் வெகு தூரத்திலிருப்பதாகத் தோன்றுமே யல்லாமல் சமீபத்திலிருப்பதில்லை. அதுபோல காதலர்கள் மனமும் ஆகும்!

வடிவாம்பாள் *சேடியர் மூலம் செல்வராஜன் சொல்லியனுப்பிய செய்தியைக்கேட்டு, காதலன் வரச்சொன்ன பிறகாரம் போவதற்கு மாலைப்பொழுதானதும் தன் தாயினிடஞ் சென்று அன்னையே! "நான் கோயிலுக்குச்சென்று சுவாமி தரிசனம் செய்து வருகிறேன் விடை கொடுத்தனுப்ப வேண்டும்" என்று கூறி அநுமதி பெற்றுக்கொண்டு, ஆடையாபரணங்களால் அலங்காரஞ் செய்துகொண்டு ஆதித்தன் அஸ்தகிரிக்குச் செல்லும் நேரத்தை எதிர்பார்த்திருந்தாள். சூரிய பகவானும் மேற்றிசையிலேறி மறையலாயினன்.

செல்வராஜனும் வடிவாம்பாளின் காதல்மனத்துக்குச் சமானமாக இருந்தான். சூரியன் மறைவதைக்கண்டு எண்ணிலா மகிழ்ச்சியோடு அலங்கரித்துக்கொண்டு மலைமேலுள்ள ஈஸ்பரன் கோயிலுக்குப் புறப்படலானான்.

* சேடியர்—தோழியர்.

வடிவாம்பாள் சூரியன் மறைந்தும் இனி என்ன மூப் போகின்றதோ? யாரேனும் பார்த்துவிட்டால் என்ன சொல்வார்களோ? என்று எண்ணி, சிந்தையை யொருவழிப் படுத்திக் காதலன் வரச்சொல்லி யனுப்பிய மலையிலுள்ள ஈஸ்பரன் கோயிலை நாடிச்சென்றாள்.

பொழுது புலர்ந்தும் அதுசமயம் தேய்பிறை நாளானதால் சந்திரன் தோன்றவில்லை. ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் நிறைந்தன வாயினும், அவைகளின் தலைவன் சந்திரனில்லாதபடியால் அரசனில்லா உலகம் போல் இருளை யகற்ற முடியவில்லை. வீடுகள் தோறும் விளக்குகள் வைக்கப்பட்டிருந்தனவேனும் அற்ப பிரகாசம்பொருந்தியுள்ள அவ்விளக்குள் இருளைப்போக்க வியலவில்லை. இவ்வேளையில் சுதா நாயகியாகிய வடிவாம்பாள் மாறு வேடம் தரித்து யாரென்றும் தன்னை இன்னாரென்று கண்டு கொள்ளாதபடிப் புறப்பட்டு ஜனங்கள் நடமாடும் இராஜபாட்டையை விட்டு வேறு ஜன நடமாட்டமில்லாத குறுக்கு வழியாக நகரத்தை விட்டு வெளியே வந்து மலையின் மேலிருக்கும் ஈஸ்பரன் கோயிலுக்கு வந்து சேர்ந்தாள். செல்வராஜனும் அதற்கு முன்னமேயே ஆலயத்திற்கு வந்திருந்தான்.

அப்பொழுது ஞானசூரியர் இக்காததர்களை நோக்கித் * தம்பதிகள் இல்லறத்தில் நடக்க வேண்டிய விதிகளை மிகத் தெளிவாகவும், விரிவாகவும் உபதேசித்துப் பின்னர் இவ்

---

* தம்பதிகள் இல்லறத்தில் நடக்க வேண்டிய விதிகளை கொக்கோக ரகசியம் அல்லது வாழ்க்கையின் மர்மம் என்னும் புஸ்தகத்திற் பார்க்கவும். விலை அணா. 12.

வாலயத்தின்கண் ணமர்ந்துள்ள கடவுளாகிய சர்வேஸ்பரன் உங்களிருவருக்கும் இப்பொழுது நடைபெறும் காந்தர்வ மணத்திற்குச் சாக்ஷியாவர் என்று சொல்லி, புன்சிரிப்போடு செல்வராஜனை வடிவாம்பாளின் கரத்தைப் பிடிக்கச் செய்தார். அவ்விதமே செல்வராஜன் வடிவாம்பாளின் கரத்தைப் பற்றிக் கொண்டு இருவரும் அக்கடவுளைப் பார்த்து, "எம்மிறைவ! உமது திருவருளால் எங்களுக்கு மேன்மேலும் அன்பானது வளர்பிறைச் சந்திரனைப்போல் வளர்ந்தோங்க வேண்டும்! எங்களின் முன்னோர்கள் கொண்டுள்ள பகைமை ஒழிய வேண்டும்!" எனப் பலவாறு போற்றித் துதித்துத் தங்கள் விரும்பியது நிறைவெய்தியமைக்குப் பெருமகிழ்வடைந்து, இருவரும் ஞான சூரியரை நமஸ்கரித்து நல்லாசீர்வாதம் பெற்றுக் கொண்டு, உடனே பூங்காவனத்தைச் சுற்றிப் பார்த்துக் களிப்பதற்காக வாலயத்தை விட்டு அகன்றார்கள்.

பின்னர் இருவரும் பூங்காவனத்தைத் தங்கள் இஷ்டம் போல் சுற்றிப் பார்த்து நடு இரவானதும் வடிவாம்பாள் தன் மாளிகைக்குச் சென்றாள். வடிவாம்பாளைப் பிரிந்த செல்வராஜன் காதலியைப் பிரிந்த வேதனையால் ஒன்றும் தோன்றாமல் அங்குமிங்கும் அலைந்துத் திரிந்து தன்னில்லத்தை நாடிச் சென்றான்.

தன் வீடு சென்ற செல்வராஜன் வடிவாம்பாளைப் பெற்றதனால் பெருமகிழ்ச்சியுற்று உல்லாசமாக இருப்பதற்கு மலையின் தாழ்வரையிற் சென்று உலாவிக்

கல்வியே கருத்தொருமித்தக் காதல் வாழ்க்கையைக் காட்டும். இன்றேல், மாட்சியுடைத்த வாழ்க்கைப் பாழாம்.

கொண்டிருந்தான். ஜனங்களுக்குத் தெளிவைத் தரும் ஆதித்தன் தக்க சமயத்தில உதயமாயினன். செய்வராஜன் சூரியோதயமானதும் மலையினின்றும் கீழே இறங்கினன்.

கீழே இறங்கி வந்த செல்வராஜன் இராஜ பாட்டையின் வழியாக வந்து கொண்டிருந்தான். வரும் வழியில் தனது நண்பனுன குணசாகரனையும், ஞானசுந்தரத்தையும் கண்டான். அது சமயத்தில் அன்பென்பது கொஞ்சமுமில்லாத வடிவாம்பாளின் சகோதரனுகிய தியாகராஜனும், அவனைச் சேர்ந்த பந்து மித்திரர்களிற் சிலரும் வந்து கொண்டிருக்கையில் குணசாகரனையும், ஞான சுந்தரத்தையும் பார்த்தார்கள். அப்பொழுது தியாகராஜன் ஞானசுந்தரத்தைப் பார்த்து, அடே! ஞானசுந்தரம்! நேற்று நாங்கள் நந்தவனத்தில் நடத்திய விருந்துக் கச்சேரியில் செல்வராஜனையும், அவனது நண்பனையும் மாறுவேடத்துடன் எங்களுடன் விருந்துண்டுக் களித்ததைக்கண்டு பிடித்து விட்டோம்'' என்று கூறிப் பின்னும், ''உன்னைப் போல் மானமில்லாதவனை நாம் பார்த்ததில்லை. இப்போது நீ இங்கே வந்ததன் காரணமென்ன?'' என்று கோபத்துடன் அதட்டிக் கேட்டு சினத்தீ பறக்க நின்றுன்.

அங்ஙனம், ஞானசுந்தரன் ''நாம் நேற்று பூங்காவனத்திற்கு வந்ததில்லை, பகைவனுகிய நீ வீணே எம்மீது சொல்வது தகுதியல்ல''வென்று கூறி, ''இனி இவ்விதம் இல்லாத வார்த்தையைச் சொல்லவேண்டாம். பகைவர் கூட்டத்தில் எமக்கென்னவேலை யிருக்கிறது?'' என்றுரைத்தான். உடனே தியாகராஜன் அடே! ''என்ன வார்த்தை சொன்னுய்'' என்று அவனுடைய கன்னத்தில் அறைந்தான்.

இவ்விதம் சண்டை நிகழ்ந்து கொண்டிருக்கையில், செல்வராஜன் அங்ஙனம் வந்து சண்டை யுண்டானதின் காரணம் அறிந்து தியாகராஜனைப் பார்த்து, அன்ப! ஏன் வீணே சண்டை வளரவேண்டும்? வேண்டாம்! என்று மிகவும் விநயத்துடன் சொன்னான். தியாகராஜனுக்கு அது கேட்டதும் மிகுதியும் கோபங்கொண்டு கண்களில் தீப் பொரி பறக்க செல்வராஜனை நோக்கி அடே! "மூர்க்கா! என்ன சொன்னாய்? நீ நேற்று மாறு வேடம் கொண்டு, உன் சிநேகிதனோடு நந்தவனத்திற்கு வந்து விருந்துண்டு, பூங்காவனத்தைச் சுற்றிப் பார்த்துக் களிப்படைந்தனை யன்றோ? ஆகையால், இதோ பார்! உன்னை கொன்று விடுகிறேன்" னென்று கடுங் கோபத்துடன் கூறினான்.

செல்வராஜன் அப்பொழுதுங் கோபங் கொள்ளாமல் மிகவும் வணக்கத்துடன் தியாகராஜனைப் பார்த்து, ஐய!

வேப்பங்காயும் விஷமும்

சிலருக்கு புத்தகங்களைக் கண்டால் வேப்பங்காய் போல் கசக்கிறது. வேறு சிலருக்கு புத்தக மென்றால் விஷம்போலிருக்கிறது:—காரணமென்ன? புத்தகங்களைப் படிப்பதால் காலம் வீணாய்ப் போகிறதாம். என்னே இவர்களது காலத்தினோக்கம்! இவர்கள் சீட்டாட்டத்திற் செலவிடும் காலத்தை; நாடகம் முதலிய வேடிக்கை விநோதங்களிற் செலவிடும் காலத்தை; மயக்கத்துக் கேதுவாகிய மதுபானஞ் செய்து மயக்கம் பிடித்திருக்கும் காலத்தை ஏன் ஞாபகப் படுகிறதில்லை.

"கோபங் கொள்ள வேண்டாம்! கோபத்தின் கொடுமையைப் பெரியோர் பின் வருமாறு கூறியிருக்கின்றனர்" அதாவது,

"குற்றங்கண் மூவகைய தண்டுபெரு கோபமே
கொடிததன் செங்கை கூறிற்
குடிகெடுக்கும் பாபமது விளைத்திடு நல்ல
குணமழிக் குந்தன் முன்னே
உற்றபொரு ளினையறிய வொட்டாது பலநாளு
மூறுகண் டனைத் தந்திடும்
ஒங்குகன மொடுசிறப் பியாவையு மழித்துமெய்
யுறவோர்க டவமொ ழிக்கும்
மற்றவர்சொல் புத்தியுஞ் செவி தனக் சேருது
மடமையில் மூழ்கு விக்கும்
மாருத துன்பமும் பயக்குமிதை மாற்றிநின்
மலரடி தொழச்செய் குவாய்

* * * * *"

என்பதாகும். இதைக்கேட்டதும் தியாகராஜனுக்குப் பின்னும் கோபம் அதிகரித்து இருவரும் ஒருவருக்கொருவர் யுத்தம் புரியலானார்கள். குணசாகரன் செல்வராஜனுக்கு "கலகம் வேண்டாம்" என்று தடுத்தும் பயன்படாமற் போயிற்று. யுத்தம் அதிகரித்துவிட்டது. தியாகராஜன் தன் வாளை எடுத்து ஓரே வீச்சாக வீசி ஞானசுந்தரத்தை வெட்டித் தள்ளிவிட்டான். தனது நண்பன் ஞான சுந்தரன் கொலையுண்டதைக் கண்டு கடுங்கோபங் கொண்டு தியாகராஜனைப் பார்த்து அடே! "பாபி! என் கண்முன் என்னருமை நண்பனைக் கொன்றனேயே! இனி நான் உன்னை சும்மாவிடப் போகிறதில்லை!" என்று சொல்லித் தன்னுரை வாளையுருவித் தியாகராஜனின் தலையை வெட்டித் தரணியில் வீழ்த்தினன்.

கோபத்திலீடுபட்டவர்கள் எத்தகையப் பாபச்செய்கைகளை யும் செய்யப் பின் வாங்கமாட்டார்களல்லவா? "கோபமானது பிறவியைக் கொடுக்கும் வித்தாகவும், அறிவைக் குறைக்கும் நோயாகவும், உயிர்களை வதைக்கும் வாளாகவும், செல்வத்தை யும், தவத்தையும் அழிக்கும் அக்கினியாகவும்" உள்ளது என்று பெரியார் கூறியது இங்கு கவனிக்கற்பாலது! ஆகவே, கோபங் கொடிதென்ப துணர்க!

இவ்விதமாக இவர்களுக்குள் கலகம் நடந்து இருவர் மாண்டுபோனது நகரமெங்கும் பரவிற்று. சூரியனும் உச் சிக்கு வந்துவிட்டான். ஜனங்கள் வேலைக்குச் சென்றிருந்த வர்கள் மத்தியான போஜனத்திற்குத்தங்கள் தங்கள் வீடுவந்து சேர்ந்தவர்கள் இக்கலக சமாசாரங் கேள்விப்பட்டுப் பார்ப்ப தற்கு வந்து கூடினார்கள். அமைச்சர்களுக்கும் இச்செய்தி எட்டிவிட்டது. இரண்டு கக்ஷிக்காரர்களும் தத்தம் மனைவி மக்களோடு கலக ஸ்தலத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அரச னுக்கும் இச் சமாசாரம் தெரிந்தது. மன்னவன் மந்திரிகள் எப்பொழுது கலகம் செய்துப் பகையுண்டுபண்ணிக் கொண் டிருந்தமையால் இப்பொழுது இக்கொலை நடந்தது. இனி

கற்பக விருட்சம் போன்றது கல்வி

வித்தை மாதாவைப் போல் காப்பாற்றுகின்றது. பிதாவைப்போல் புத்தியைக் கற்பிக்கின்றது. காந்தை யைப்போல் களிப்பூட்டுகின்றது. சர்வ துக்கத்தையும் நிவர்த்தி செய்கின்றது. திசைகளில் கீர்த்தியைப் பரவச் செய்கின்றது. கற்பகவிருட்சத்தைப் போல் வித்தை யெதைதான் கொடுக்கமாட்டாது.

நாம் சும்மா யிருந்துவிடக் கூடாது. குற்ற வாளியைக் கண்டு பிடித்து தக்கபடி தண்டிக்கவேண்டும் என்று நிச்சயித்துக்கொண்டு, சேவகர்களுடன் கொலை நிகழ்ந்த விடத்திற்கு வந்து சேர்ந்தான்.

செல்வராஜன் கூட்டத்தைக்கண்டு திகிலடைந்தவனாய், "ஐயோ! நாம் ஏன் இவ்வடாத காரியத்தைச் செய்தோம்!"

"எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவ மென்பது இழுக்கு"

என்று ஆன்றோர் கூறியதையும் நாம் எண்ணிப் பாராமற் போய்விட்டோமே! கோபத்தினாலல்லவா இக்காரியத்தைச் செய்தோம். கோபம் மகா கொடிதென்று நாம் தியாகராஜனுக்கு எடுத்துக் காட்டிப் புத்திபோதித்த நாமே கோபங்கொண்டு விட்டோமே! கோபம் எதையும் எண்ணச் செய்யாது என்பது உண்மையாயிற்றே!"

"கோபத்தாற் கௌசிகன் தவத்தைக் கொட்டினான்;
கோபத்தால் நகுடனுங் கோல மாற்றினான்;
கோபத்தா லிந்திரன் குலிசம் போக்கினான்;
கோபத்தால் கெட்டவர் கோடி கோடியே!"

என்பதை எண்ணி யெண்ணி வருந்தி "இனியான் என் செய்வேன்! இனி என் முகத்தை என்னைப் பெற்றோரிடத்தும், மன்னனிடத்தும், ஜனங்களிடத்தும் எப்படிக் காட்டுவது" என்று வருந்தி அவ்விடத்தை விட்டு ஆலயத்திற்குச் சென்று ஆலயத்திற்கு வரும் தன் குருவின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். இஃதிங்ஙனம் மிருக்க,

கொலை நடந்தவிடத்தில் ஜனங்கள் வந்து கூடிவிட்டார்

கள். அவரவர்களும் பலவாறாகப் பேசிக்கொண்டார்கள். மன்னவன் வந்து கலகத்தின் காரணமாக நிகழ்ந்த இக்கொலையைப் பற்றி என்ன தீர்மானிக்கப் போகிறான் என்று ஜனங்கள் எதிர்பார்த்திருந்தார்கள். செல்வராஜனின் தாயும், வடிவாம்பாளின் தாயும் தங்கள் மக்கள்மேல் யாதும் குற்றமில்லையென்று அரசனிடம் தெரிவித்து தங்கள் மக்களுக்கு யாதொரு தண்டனையுமில்லாதவாறு செய்யும் வண்ணம் தங்கள் தங்கள் கணவரிடம் சொல்லியனுப்பினார்கள். அவர்களுள் வடிவாம்பாளின் தந்தை ஒரே புதல்வனான என்னருமைக் கண்மணி தியாகராஜன் இறந்துவிட்டானே! இனி யான் என்செய்வேன்! என்று மிகவும் வருத்தப்பட்டான். தன் புதல்வன் என்னதான் கெட்டவனாயினும் கொலையுண்டான் என்றால் யார்தான் வருத்தப்பட மாட்டார்கள்.

செல்வராஜனுடைய தந்தை தன் குழந்தை குற்றவாளி என்று மன்னன் தீர்மானித்து விட்டால் எங்ஙனம் கடுந்தண்டனை ஏற்படுமோ என்று மனங்கலங்கினான். பின்னர் இருவரும் கொலைநடந்தவிடத்திற்கு வந்து கொலை நிகழ்ந்த

குற்றங்காணும் நிபுணன்

ஒரு புலவர் தனக்குப் புத்தகமெழுதத் தெரியாவிட்டாலும் ஒருவர் எழுதிய புத்தகங்களிலுள்ள குற்றங்களைக் கண்டு பிடிக்கும் சாமார்த்தியமெண்ணிடமுண்டென்றார். இது உண்மை! வீடுகட்ட வகையறியாதவன் கட்டின வீட்டுக்குக் குற்றங் கூறுவதியல்பன்றோ? கடவுளாலாக்கப் பெற்றவைகளிற் சிற்சிலவற்றை வெறுப்பது மனிதர்களது சுபாவமல்லவா?

தன் காரணத்தை விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அரசனும வந்து சேர்ந்தான். அரசன் எல்லோருக்கும் முன்பாக நான் இக்கொலையைப்பற்றி விசாரித்து இப்பொழுதே தக்க தண்டனை விதிக்கப் போகின்றேன். இக்கலகத்தைப் பற்றிய விஷயம தெரிந்தவர்கள் இப்பொழுதே என்முன் வந்து கூறலாம் என்று எல்லோருக்கும் தெரிவித்தான்; இச்செய்தியைத் தெரிவிக்க கொஞ்ச நேரத்திற்கெல்லாம் ஜனங்கள் கலைந்தனர். பேரிரைச்சலும் நிச்சப்த மாயிருந்தது.

பிறகு, அரசன் சபையோர்களை நோக்கி "இங்கு கூடியுள்ளவர்களே! இக்கலகத்திற்கு முக்கிய காரணம் நமது இரு மந்திரிகளுமே யாவார்கள்! அவர்களிருவரும் ஒருவருக்கொருவர் மிகுந்த பகைகொண்டிருந்தமையால் நமது நாடு பலவிததிலும கெட்டுவிட்டது! மேலும், நீங்களே இக்கொலைக் காட்சியைக் கண்கூடாகக் கண்டிருக்கிறீர்கள்! தனபாலன தனக்கு ஒரே புத்திரனாயிருந்த தியாகராஜனை யிழந்துவிட்டான! ஜயபாலனும் தன் சிறியதாயின் புத்திரனான ஞானசுந்தரத்தை இழந்துவிட்டான்! செல்வராஜன் தியாகராஜனைக் கொன்றிருப்பதால் நான் அவனுக்குத் தக்க தண்டனை விதிக்கப்போகிறேன்! இனிமேல் யார் எவ்வித கலகம் விளைவித்தாலும அவர்களுக்குக் கண்டிப்பாக மரணதண்டனை தான் கொடுப்பேன்! இதை எல்லோரும் ஞாபகத்தில் முக்கியமாக வைத்துககொள்ளவேண்டியது! இந்த கொலை நிகழ்ந்த விருத்தாந்ததைப்பற்றி தெரிநதவர்கள என்னிடம் உடனே தெரிவிததால நான் தீர் விசாரித்து தண்டனை விதிப்பதற்கு அநுகூலமாக இருக்கு"மென்றான்.

அதுபோழ்து, செல்வராஜனின் நண்பனான குணசா

கரன் அரசனெதிரே வந்து வணக்கத்துடன் முன்னிகழ்ந்த வற்றை யாதியோடந்தம் வரையில் சொன்னான். ஆனால், செல்வராஜன் வடிவாம்பாள் மேற் காதல் கொண்டதை மாத் திரம் சொல்லவில்லை. அவ்விதம் குணசாகரன் சொன்னதால் தியாகஜனுக்கும், செல்வராஜனுக்கும் அநுகூலமில்லை. அவன் அவ்விதம் சொல்லி முடித்ததும், அங்கு இருந்தவர்கள் ஒரு வரும் அவன்மீது குறை கூறவில்லை. அரசன் எல்லாவற்றை யும் விசாரித்துக்கொண்டு இக்கலகத்தில் தியாகராஜனும், ஞானசுந்தரமும் இறந்தனர். இரண்டு கொலைகள் ஏற்பட்டு விட்டன—சாக்ஷியாக விசாரிக்கப்பட்ட குணசாகரன், செல்வ ராஜன் விருந்திற்கு அழைக்காமலிருக்கும்போதே விரோதி கள் கூட்டத்தில் சேர்ந்துகொண்டானென்றும், ஆகவே கல கத்திற்குக் காரணமாவானென்றும் சொல்லுகிறான். ஆகை யால், செல்வராஜனுக்கு நான் விதிக்கும் தண்டனையாவது செல்வராஜன் உயிருள்ளளவும் தேசபிரஷ்டமாக விருக்க வேண்டுமென்று உத்திர விட்டிருக்கிறேன். செல்வராஜன் இன்றையத்தினமே அயல் தேசம் போகவேண்டும், இனி மேல் மந்திரிகளும் சரி, அவர்களைச் சேர்ந்தவர்கள் யாவ ரேனும் கலகம் செய்தால் நான் கடுந்தண்டனை விதிப்பேன் என்று முடிவுகூறினான் அரசன். உடனே ஜயபாலன் அர சன் முன்வந்து வணக்கத்துடன் நமஸ்கரித்து தன் புதல்வன் செல்வராஜனை மன்னித்து தண்டனையினின்றும் விடுதலை செய்யவேண்டுமென்று வேண்டிக் கொண்டான். அரசன் அதற்கு இவ்விஷயத்தில் இனியான் ஒன்றும் சொல்ல முடி யாது. வீணே மன்னிப்புக்கேழ்ப்பதில் பயனில்லை என்று சொல்லிவிட்டு அரண்மனைக்குச் சென்றான். ஆங்கு கூடி

யிருந்த ஜனங்களெல்லோரும் தங்கள் தங்கள் வீட்டை யடைந் தார்கள்.

இவ்விஷயங்களை எல்லாம் தோழிப் பெண்கள் மூலம் அறிந்த வடிவாம்பாள் சிந்தை நொந்து இனி செய்வது என்னவென்று ஒன்றும் தோன்றாது கண்ணீருதிர்த்துப் புலம்பித் தவித்துக் கொண்டிருந்தாள். செல்வராஜனும் ஆலயத்திற்கு வந்த ஜனங்கள் மூலமாக அரசன் ஆக்ஞையைத் தெரிந்துகொண்டு, காதலி வடிவாம்பாளைப் பிரிந்திருக்கச் சகியாதவனாய் வருந்திப் புலம்பிக் கொண்டிருந்தான்.

மேலும், செல்வராஜன் "அந்தோ! நான் இனி என்செய் வேன்! காதலி வடிவாம்பாளைப் பிரிந்து தேசாந்திரம் போமாறு அரசன் உத்திரவளித்து விட்டானே! இவ்வித தண்டனை செய்வதினும், என்னுயிரைக் கொள்ளை கொண்டு விடுவது நலமாமே! அன்புமிகுந்த காதலியுட னிருப்பதன்றோ சுவர்க்கம்! மற்றவிடம் இருப்பது எமபுரமல்லவா? அரசன் இவ்விதமாக உயிருடனிருக்கச் செய்து மனதை வருத்து வதைவிட சிரசைக் கொய்திருப்பானேல் நலமாகும்! இனி நான் இத்துன்பக் கடலினின்றும் எவ்விதமாக கரை யேறு வேன்? எனது ஆசை நாயகியைப் பிரிந்து எப்படி உயிர் வாழ் வேன்! ஆ! ஏழைபங்காளா! நீ என்மீது கருணைகொண்டு எனக்குற்ற இடையூறகற்றாயா?" என்று பலவாறுப் புலம்பிப் பரிதவித்தான்.

செல்வராஜன் தன்னை யறியாமல் வாய்விட்டுப் புலம்பிக் கொண்டிருக்கும்போது, வழக்கம்போல் ஆலயத்திற்கு வரும் ஞானசூரியவர் வந்தார், செல்வராஜன் ஆற்றொணாத் துயரத்து,

டன் புலம்பிக்கொண்டிருப்பதைப் பார்த்து, அன்ப! செல்வ ராஜ்! நீ ஆண்மகனன்றோ? ஏன் இவ்விதம் வருந்திப் புலம்பு கின்றாய்? வருந்திப் புலம்பும் குணம் பெண்களுக்கன்றோ வழக்கம்? அதுவும் இக்கலியுகத்துப் பெண்களிடம் கிடையா மற் போய்விட்டது! நீயோ வீரம்பொருந்திய குலத்திற் பிறந்த ஆண்மகன்! இப்படியும் புலம்பித் தவிக்கலாமா? இனி புலம்புவதை விட்டு சமாதானப் படுவாயாக!'' என்றுத் தேறு தல் கூறினார்.

செல்வராஜன் ஞானசூரியரை நமஸ்கரித்து "ஆபத்துக் காலத்தில் வந்து தேறுதல் கூறிய மாதவனே! எனக்கு அர சன் தேசாந்திரம் போகும்படியாக ஆக்கினை யிட்டிருப்பதா கத் தெரியவருகிறது! இதற்குபான் என்செய்யவேண்டும்?'' என்று மிகவும் பரிதாபத்துடன் கேட்டான்.

அதற்கு, ஞானசூரியர் 'அன்பனே! நீ இதற்காக வருந்தவேண்டாம்! தேசபிரஷ்டம் என்றால் இவ்வரசனின் தேசத்தில் இல்லாமல் வேறு தேசத்தில் வசிப்பதே யாகும். இம்மலையின் தென்பால் மகததேசம் என்று ஒன்றிருக்கிறது. அத்தேசத்தை அரசு செலுத்தும் அரசன் மிகவும் நல்லவன். குடிகளுக்கு இன்னல்விளைவிக்காதஉதாரகுணத்தினன். நீ அத் தேசத்திற் போய் கொஞ்சகாலம் வசித்திரு! நான் சில காலம் சென்றதும் வடிவாம்பாளுக்கும், செல்வராஜனுக்கும் மணம் முடிந்துவிட்டது என்று தெரியப்படுத்துகிறேன் அதன் பின் னர் பகைவராகிய மந்திரிமாரும் நண்பராவார்கள். அதைக் கண்டு மன்னவனும் உனக்கு விதித்தத் தண்டனையைநீக்கிவிடு வான். ஆகையால், நீ சீக்கிரமாக வடிவாம்பாளிடம் சென்று விடை பெற்றுக்கொண்டு மகததேசத்திற்கு போகவேண்டும்.

இது தான் நலமாகும். இதன்படி செய்'' யென்று விடை கொடுத்தனுப்பினர்.

உடனேசெல்வராஜன் காதலியாகியவடிவாம்பாளைக் காண நந்தவனத்திற்கு வந்தான். நந்தவனத்தில் வடிவாம்பாளைக் கண்டு அவளுடன் உல்லாசமாக வார்த்தையாடிக்கொண்டு நந்தவனத்தைச்சுற்றி யொருவருக்கொருவர் சரச வார்த்தைகளாடிக் கொண்டிருக்கையில் அருணோதயகாலம் கிட்டியது. உடனே செல்வராஜன் வடிவாம்பாளைப் பார்த்து, ''மனமொத்தப் பெண்ணே! என்னுசை யிரஞ்சிதமே! இனி நான் இங்கு இருக்கக்கூடாது! சூரியோதயமாகப் போகிறது. எனக்கு விடை கொடுத்தனுப்பவேண்டும்! நீ என்னைப் பிரிந்திருப்பதற்காக வருந்தவேண்டாம்! இன்று நான் இந் நாடு விட்டு அயல் நாடு சென்று வரும்வரையில் சகல சமாச்சாரங்களையுனக்குக் கடிதமூலமாக தெரிவிக்கிறேன்! நீ சிந்தையைச் சிறிதும் சிதறவிடாமல் தைரியமாக இருக்கவேண்டும்! நான் போய் வர விடைகொடு'' என்று இயம்பினன்.

செல்வராஜன் கூறிய வசனங்களைக் கேட்ட வடிவாம்பாள் சமாதானமடைந்த மனத்துடன் செல்வராஜன் சென்று வர விடைதந்தாள். அதன் பின்னர் செல்வராஜன் இனி நாம் இருப்பதினல் உயிருக்கே ஆபத்து வந்துவிடும் என்றெண்ணி நந்தவனத்தை விட்டகன்று அந்நாட்டைவிட்டு அயல் நாட்டை நாடிப்போனன்.

——:o:——

நான்காவது அத்தியாயம்

உலகிலுள்ள ஜனங்களை மகிழ்விக்கும் வசந்த காலத்தில் பூமாதேவியானவள் இளநங்கையைப் போல் சகலஜீவராசிகளையும் வசியப்படுத்தினுள். இலையுதிர்ந்த மரம், செடி, கொடிகளெல்லாம் புதிய தளிர்களால் பிரகாசத்துடன் விளங்கின. கொன்றை, புன்னை, மாதிரி, மல்லிகை, முல்லை, இருவாட்சி, செண்பகம் முதலிய மலர்களின் வாசனை கமகமவென்று வீசிற்று வண்டுகள் மலர்களில் வந்தமர்ந்து மதுவையுண்டு இனிமையுடன் ரீங்காரஞ் செய்தன. மயில்கள் வசந்தனை வரவேற்பதுபோல செவிக்கினியப் பாக்களைப் பாடின. அதுபோது ஜனங்கள் சந்தோஷத்துடன் மதுவையுண்டு, மலர்களைப் பரித்து, நீர்விளையாடி காலத்தைப் போக்கினுர்கள்.

மனிதர்களுடைய மனம் பற்பல நிலைமைகளால் அடிக்கடி மாறுதலடைந்தாலும், காலநிலைமை மாறுதலடைவதில்லை. ஆனுல், மனிதர்கள் சுகமாக இருக்கும்போது காலம் விரைவில் செல்கின்றன வென்றும், துயருறும் காலத்து காலம் வளருகின்றனவென்றும் எண்ணுகின்றனர். இது எல்லோரும் அறிந்த விஷயமே! கால பேத வேற்றுமைகள் காதலர்களுடைய மனத்தில் மிகுதியாகக் காணலாம். காதலர்க்கு காலமென்று ஒன்றிருப்பதாகக் கூட தோன்றுது.

பொழுது விடிந்தாலும், ஆதித்தன் உச்சியிலேறினாலும், மாலைக் காலம் வந்தாலும் காதலர்களுடைய மனத்தில் காதலைத்தவிர வேறு ஒன்றும் குடிகொள்வதில்லை. செல்வராஜனும், வடிவாம்பாளும் காதலையே எண்ணியெண்ணி யேங்கிக் கொண்டிருந்தார்கள். ஞானசூரியர் என்ற பெரியார் மூலமாக வடிவாம்பாள் அனுப்பியக் கடிதங்களும், செல்வராஜன் அனுப்பியக் கடிதங்களும் காதலரிருவருக்கும் ஆறுதலளித்து வந்தது. ஆசையும் குறையாது வளர்ந்து வந்தது. ஆயினும் இக்காதலர்கள் எப்பொழுது ஒன்றுசேர்ந்து களிப்படைவோமென்பதை மாத்திரம் அறியவில்லை.

ஒரு சமயத்தில் வடிவாம்பாள் தன் மாளிகையில் மஞ்சத்திற் படுத்துக்கொண்டு, எந்த வேலையிலும் மனங்கொள்ளாமல் சித்திரப்பாவையைப்போல் அசைவற்றுக் கிடந்தாள். இவ்விஷயத்தை அவளுடையத் தோழிப்பெண்கள் அவளைப் பெற்றோரிடம் தெரியப்படுத்தினார்கள். அது கேட்டுப் பெற்றோர்கள் "நாம் இது காலம்வரை வடிவாம்பாளுக்குத் தக்கக் கணவனைத் தேடி மணஞ்செய்து வைக்கவில்லை யல்லவா? அதனால் தான் வடிவாம்பாள் வருத்தத்துடன் இவ்விதம் இருக்கின்றாள் போலும் என்றெண்ணிக்கொண்டு; இனி நாம் அவளுக்குத் தக்கக் கணவனைத் தேடி விவாகத்தை முடித்து வைக்கவேண்டும்" என்று நிச்சயித்தார்கள்.

மறுநாட் காலையில் வடிவாம்பாளின் அன்னையும் பிதாவும் வடிவாம்பாளின் மாளிகைக்கு வந்து, "குழந்தாய்! உனக்குத் தக்கக் கணவனைப் பார்த்து மணஞ் செய்து வைக்க வேண்டுமென்று எண்ணம் எங்களுக்குண்டாகி வெகுநாளாயிற்று! நீ தக்ககாலத்தில் கணவனைப் பெறாதபடியால் உடல்

மெலிந்து மனக்கவலே யுற்றிருப்பதை நாங்கள் நேரிற்கண்டோம்! நீ தக்கக் கணவனைப்பெற விரும்புவது எங்களுக்குப் பெரு மகிழ்ச்சியே யாம்! உனக்கு மணவினை நிகழுமுன்னமே விதிவசத்தால் உன் சகோதரன் தியாகராஜன் இறந்து போனான். சென்றதை யெண்ணி யெண்ணி வருந்துவதில் பயன் யாதுளது? உன்னுடைய உடல் நலம் நாளுக்கு நாள் க்ஷீணதிசையிலிருப்பதைப் பார்க்க இன்னும் எங்களுக்கு வருத்தம் மேலிடுகின்றது! உன் சகோதரன் இறந்த துயரத்தையும் பொருட்படுத்தாமல் உனக்கு விவாகம் செய்துவைக்கப் பிரயத்தனப்பட்டிருக்கிறோம்! ஆகையால், நம் சுற்றத்தாருள் குணத்திலும், அழகிலும் சிறந்த உனக்கிஷ்டமானப் புருடனைத் தெரிவிக்கவேண்டு!" மென்றார்கள்.

இவ்வார்த்தையைக்கேட்ட வடிவாம்பாள் உயிரற்ற மரம் போல் ஸ்தம்பித்து நின்று அன்னை தந்தைக்கு யாதும் பதிலுரைக்கவில்லை.

மேலும், ஒரு பெண்மணி முன்னமே தான் காதலித்தப் புருடன் மேலேயே கண்ணுங் கருத்துமாக விருப்பாளல்லாமல், வேறு புருடன் மேல் காதலுண்டாகா தல்லவா? வேறு யார்தான் முன்னமே காதலிக்கப்பட்டப் புருடனை விடுத்து, வேறு புருடனை மணஞ் செய்துக்கொள்ள என்ன தான் போதித்தாலும் அவள் மனம் சிறிதும் மாறுதலடையுமோ? அடையாது. இவ்விதமே தான் வடிவாம்பாளிடம் காணப்பட்டது. இது காதலர்க்குற்ற இயற்கை குணம்.

காதலித்த வொருவனையே யென்றுங் காதலித்து வாழுதல் கற்புடையப் பெண்டிருக் கழகு.

வடிவாம்பாள் பதில் யாதும் சொல்லாது அசைவற் றிருக்கவே. அவளின் தாய் தந்தையர் "இவள் நாணத்தால் பதிலுரைக்க வெட்கப்படுகின்ருள்" என்று எண்ணி, மீண்டும் அவளைப் பார்த்து," குழந்தாய்! வடிவம்! வேதபுரியின் வேந்தனுகிய வேதாசலம் என்பவன் உனக்குத் தக்கக் கணவ னென்று நாங்கள் நிச்சயித்துள்ளோம்! பெண்கள் இளமைப் பிராயத்தில் இவ்வித விஷயங்களில் நன்மை தீமைகளை யுணர மாட்டார்கள்! ஆகையால், நீ ஒன்றும் மாறுபடக் கூருது நாங்கள் தீர்மானித்தப் புருடனையேக் கணவனுகக் கொள்ள வேண்டும்! அவனைப் பற்றிய குணுதிசயங்களை நீயும் தெரிந் திருக்கலாம்! "விவாகம்" என்பது சதிபதிகளுடைய எதிர் கால சுகதுக்கங்களைப் பொறுத்திருக்கிறது. ஆகவே, நீ உன்னுடைய குணம் முதலியவற்றையும் ஒத்திட்டுப் பார்த்து வேதாசலமே உனக்குகந்த கணவன் என்பதை நிச்சியப் படுத்திக்கொள்!" என்று சொல்லிவிட்டுத் தங்கள் மாளிகைக் குச் சென்ருர்கள்.

அதன் பின்னர் வடிவாம்பாள் மனங்கலங்கிப் பின்வரு மாறு புலம்பலாயினுள்.

"அந்தோ! ஈசா! இனி நான் என்செய்வேன்! என்னைப் போல் துயருறும் பெண் இப்பூவுலகிலுண்டோ? நான் காத லித்தப் புருடனைவிட்டு என்னைப் பெற்ருேர் வேறு புருட னுக்கு வதுவை செய்துவைக்கத் தீர்மானித்திருக்கின்ருர் களே! இதைத் தவிர்த்து வைப்பவர் யாரோ? என் காதலன் பிரிவை யான் எவ்விதம் சகிப்பேன்! என் தந்தையின் சொற் படி வேதாசலத்தை மணஞ்செய்துக் கொண்டால் என் கற்புக்குப் பங்கமாகுமே! கற்பன்ருே பெண்கட்கு அணி

கலன்! கற்பையிழந்து இவ்வுயிரிருந்து என்ன? இறந்தென்ன? இப்பெருங் கஷ்டத்தை நீக்கவல்லவர் ஞான சூரியர்தான் என்று தீர்மானித்து, கடவுளைத் தியானஞ்செய்யப்போகின்றேன்'' என்று தாயினிடம் அநுமதிபெற்றுக்கொண்டு, ஞான சூரியரிடம் சென்று அவர் திருத்தாட்களில் வீழ்ந்து நமஸ்கரித்து நின்றாள். உடனே ஞானசூரியர் வந்து வணங்கி நின்ற வடிவாம்பாளை ஆசீர்வதித்து, "மாதர் திலகமே! இன்று ஏன் முகம் வாட்ட முற்றிருக்கிறாய்? நீ இப்போது இங்கு வந்ததன் காரணம் யாது? ஏதேனும் விபரீதச் செயல்கள் நிகழ்ந்தனவோ? செல்வராஜன் அனுப்பிய கடிதங்களை எல்லாம் நீ வாசித்துப் பார்த்தனையோ? காலங் கடத்தாமல் விடயங்களை ஒளிக்காமல் கூறுவாய்!'' என்றார்.

அதற்கு வடிவாம்பாள் தன் தந்தை சொல்லியவற்றை யெல்லாம் விவரமாகக் கூறி, "ஐயனே! எனக்கு நேர்ந்துள்ள இவ்விடுக்களைத் தீர்த்து வைக்கவேண்டும்! இது தங்கள் கடமையாகும். நான் முன்னமே காதலித்த செல்வராஜனை யன்றி, வேறு புருடனிடம் சிக்காவண்ணம் பாதுகாத்து எவ்விதத்திலாயினும் என் காதலனிடம் சேர்த்து என்னுயிரினுஞ் சிறந்த கற்பைக் காக்கும்படிச் செய்யவேண்டும்!'' என்று கூறினாள்.

அங்ஙனம், ஞானசூரியர் கொஞ்ச நேரம் யோசித்து தன் மனத்துட் டீர்மானித்துக் கொண்டு திடத்துடன் அவளைப் பார்த்து "குழந்தாய்! உன்னுடைய தந்தை யுனக்கு விவாகஞ்செய்து வைப்பதற்கு முயற்சியுள்ளவனாக விருப்பது நம்முடைய காரியத்திற்கு மிக்க வநுகூலமானவையே! நீ அதைப்பற்றிக் கவலைபடாதே! உனக்கு என்னிடம் நம்பிக்கை

யுண்டானால், நீ வேதாசலத்தை விவாகஞ் செய்துக்கொள்ள விருப்பம் உள்ளவளைப் போல் உன்னைப் பெற்றோர்களிடம் நடந்துகொள்ள வேண்டிய''தென்று விளம்பினார்.

இவ்வார்த்தையைக் கேட்ட வடிவாம்பாள் "ஐயனே! இவ்விதம் நடந்து கொள்வதால் எனக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல் எவ்வாறு நீங்கும்?'' என்று கேட்டாள்.

அதற்கு ஞானசூரியர், "பூவையர் திலகமே! நீ இது பற்றிக் கொஞ்சமும் அஞ்சவேண்டாம்?'' நான் கொடுக்கும் இக்குளிகையை எடுத்துக்கொண்டுபோய் நான் சொல்லும் படி நீ செய்யவேண்டும்!

அதாவது, வேதபுரியின் வேந்தன் வேதாசலத்திற்கு உன்னை விவாகம் செய்துக்கொடுக்கும் முதநாளிரவில் இக் குளிகையைச் சாப்பிடல்வேண்டும் குளிகையைச் சாப்பிடுவ தால் நீ இறந்தவளைப்போல் காணப்படுவாய்! அதைக்கண்ட் உன் தந்தை நீ இறந்துபோவது சகியாமல் உன்னை உயிர் பெறும்படிச் செய்யவேண்டுமாய் நாடெங்கும் பறைசாற்று விப்பான். அதுசமயம் நான் அவன் வந்து உன்னைப் பிழைக் கும்படிச்செய்வேன்! நீ சிறிதும் ஐயமுறாமல் இக்குளிகையை முன் நான் சொன்னபடி சாப்பிடு!'' என்று குளிகையைக் கொடுத்தார். வடிவாம்பாள் உடனே ஞானசூரியர் கொடுத்தக் குளிகையை யன்புடன் வாங்கிக்கொண்டு அவரிடம் அநுமதி பெற்று தன் மாளிகைக்குச் சென்றாள்.

மறுதினம் காலையில் வடிவாம்பாளின் தாயார் மகளின் மனோநிலைமையை யுணருவதற்காக வடிவாம்பாளின் மாளி கைக்கு வந்தாள். அது சமயம், வடிவாம்பாள் தன் தாயை

யன்புடன் முகமலர்ச்சியோடு வரவேற்றாள். அதுகண்ட அன்னை, "நாம் இதுவரை பெண்ணுக்கு விவாகம் செய்து வைக்காதது பெருந்தவறு." என்று எண்ணினாள். அங்ஙனம், அன்னையை யன்புடன் வரவேற்று வணங்கி நின்ற வடிவாம் பாளை நோக்கி "குழந்தாய்! நாளையத்தின முனக்கு விவாக மகோற்சவம் நடைபெறப் போகின்றது! நீ ஆடையா பரணங்களை யணிந்து சிங்காரித்துக் கொண்டிரு" என்று கூறிவிட்டுத் தன்னிருப்பிடம் சென்றாள்.

வடிவாம்பாள் தன் தாய் நாளை தனக்கு விவாகம் நடக் கப் போவதாகக் கூறியதைக் கேட்டு, மனம் திடுக்கிட்டு, உடனே ஞானசூரியர் கொடுத்த குளிகையை உட்கொண்டு படுத்துக்கொண்டாள்.

நகரமெங்கும் வடிவாம்பாளுக்கும், வேதாசலத்திற்கும் விவாகம் நடைபெறப் போகின்றதென்று பிரசித்தப்படுத்த லாயிற்று இவ்விஷயம் அரசனுக்கும், மற்றும் பிரபலஸ்தர் களுக்கும் தெரியவந்தது. நகர மாந்தர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் வீடுகளை அலங்கரித்தார்கள். வீதிகளெல் லாம மாவிலை தோரணங்கள் கட்டி, தண்ணீர் தெளிக்கப்பட் டிருந்தன. அன்று அந்நகரம் தேவலோகம்போல் விளங் கிற்று. வம்வாம்பாளின் தோழிப்பெண்கள் வடிவாம்பா ளிடம் சென்று அவளை யெழுப்பி யலங்காரஞ் செய்யத் துன்புறுத்தினார்கள்.

வடிவாம்பாளின் தந்தை மணமகனை வேதாசலத்தைச் சேர்ந்தவர்களை யன்புடன் வரவேற்பதில் கண்ணுங் கருத்து மாக விருந்தான். மேலும், வேலையாளர்கள் தம் தம் வேலை களைச் செவ்வனே செய்து வைத்திருக்கிறார்களென்பதை

B-1
10-61

யுணர்ந்து கொண்டான். ஆனால், மணமகளாகிய வடிவாம்பாள் எவ்விதமிருக்கிறளென்று அவன் எண்ணவேயில்லை. கல்யாண மண்டபத்தில் பலவித வாத்தியங்கள் முழங்கின நகரெங்கும் கல்யாணப் பேச்சாகவே யிருந்தது.

வடிவாம்பாளின் தந்தை சேடிகளையழைத்து "நீங்கள் வடிவாம்பாளின் மாளிகைக்குச் சென்று அவளை நன்றாய் அலங்கரித்து இவ்விவாக மண்டபத்திற்குக் கொண்டு வாருங்கள்" என்று கட்டளையிட்டான். அதன் பின்னர் பலவித வாத்தியங்கள் முழங்க தம்முறவினரோடு சென்று மணமகளை கலியாண மண்டபத்திற்கு அழைத்து வந்தான்.

சேடியர்கள் வடிவாம்பாள் மாளிகைக்குச் சென்று பார்க்கும்போது அவள் பிரக்ஞையற்று பூமியில் படுத்துக் கிடந்தாள். உடனே சேடியர் "அம்மணி!" என்றழைத்தார்கள். அதற்கு அவள் யாதும் பதில் சொல்லவில்லை. பிறகு மீண்டும் சேடியர்கள் "அம்மா கண்மணி! இன்னும் நீ கண் விழியாது தூங்குவதன் காரணமென்ன?" என்று சொல்லியும் அதறகும் அவள் பதில் ஒன்றும்சொல்லவில்லை. அதன பின்னர் சேடியர்கள் சந்தேகப்பட்டு, அவள் மூக்கில் விரலைவைத்துப் பார்க்கையில் சுவாசமில்லாதிருப்பது கண்டு தியங்கலானார்கள். உடல் கடுங்கிற்று. உள்ளம் வெதும்பிற்று. உடனே வடிவாம்பாளின் அன்னையிடம் வந்து "தங்கள் பெண் இறந்து விட்டாள்" என்று தெரிவித்தார்கள். உடனே வடிவாம்பாளின அன்னையலறி நிலத்தில் வீழ்ந்து மூர்ச்சித்தாள். உடனே தாதிகள் முகத்தில் நீர் தெளிதது விசிறி கொண்டு விசிறினார்கள். அதனால் அவள் கொஞ்சம் தெளிவடைந்து புலம்பலானாள்.

"என்னருமை மகளே! நீ அன்புடன் கணவனுடன் கலந்து வாழ்வாய் என்றெண்ணி மகிழ்ந்தேனே! மகிழ்ந்த என்னைத் துன்பக் கடலுலாழ்த்தி விட்டுப் பொன்னுலகம் போனாயே! இனி நான் இவ்வுலகி லெவ்விதம் வாழ்வேன்! நான் வாழ்ந்துதான் பயனென்ன? உன் திரு மணக் கோலத்தைக் கண்டு களிக்க உற்றவரும் மற்றவரும் எத்தனை பேர்கள் வந்திருக்கின்றார்கள். அவர்களெல்லோ ரையும் வருந்தச் செய்து நீ மாண்டனையே; மணப்பெண் ணைப் பார்க்காப்பாவியானேனே! நீ உயிருடனிருந்து யான் இறத்தலன்றோ தகுதி? ஐயகோ! என் விதிவசமே! இனி என்னுயிரைக் கணமேனும் வைத்திருக்கமாட்டேன்" என்று கூறிப் புலம்பியது மாளிகையிலுள்ளோர் அனைவருக்கும் எட்டியது. இச்சத்தம் கேட்ட வடிவாம்பாளின் தந்தை திகைப்புற்று, பெண்ணிருக்கும் மாளிகைக்கு வந்து சேடியர் களை நோக்கி, "இங்கு என்ன நேர்ந்தது? ஏன் இவ்வளவு அழு குரல் கேட்கிறது?" என்று கேட்டான்.

அதற்கு அவர்கள் "ஐயனே! நேற்றிரவு வடிவாம்பாள் நித்திரை செய்வதற்காக இவ்விடம் வந்தாள். இன்றையத் தினம்; காலையில் நாங்கள் தங்கள் உத்திரவின்படி அவளை யெழுப்ப வந்தோம்! சூரியன் உதித்து வெகு நாழிகையாகி யும் அவள் எழுந்திருக்கவில்லை. ஆகையால், இச் செய் தியை எஜமானிக்குத் தெரிவித்தோம். அவர்கள் வந்து பெண் மூர்ச்சையில்லாமல் பிணமாகக் கிடப்பதைப் பார்த்து அழுது கொண்டிருக்கிறார்கள்" என்றுரைத்தார்கள்.

அவ்வார்த்தைகளைக் கேட்ட தனபாலன் பெருந்துயர டைந்தவனாய், "இனி தன் பெண் வடிவாம்பாள் உயிர் பெற்

றெழுந்தால் என் மனப்பூர்த்தியாய் அவளிச்சித்த செல்வ ராஜனுக்கே விவாகஞ் செய்து வைக்கிறேன்" என்று கூறி, உடனே செல்வராஜனை இங்கே தருவியுங்கள் என்று ஞான சூரியரிடம் சொன்னான்.

அதன் பின்னர், ஞானசூரியர் "நாடு கடத்தப் பட்ட செல்வராஜனை யாரும் தேடவேண்டாம். நானே அவனை யிவ்விடம் தருவிக்கிறேன்" என்று கூறி, சந்நியாசி வேடத் துடன் அவ்விடம் வந்து சந்நியாசிக் கூட்டத்திலுள்ள செல்வ ராஜனை சந்நியாசியின் வேடத்தைக் கலைக்கச் செய்தார். உடனே செல்வராஜன் சந்நியாசியின் வேடத்தைக் கலைத் தான். பின்னர் தனபாலன் செல்வராஜனின் தந்தை ஜய பாலனையழைத்து வரும்படிச் செய்தான். ஏவளாட்கள் ஜய பாலனிடம் சென்று நடந்த சமாச்சாரங்களைச் சொல்ல, ஜய பாலன் நாடு கடத்தப்பட்ட தன் அருமைப் புதல்வன் செல்வ ராஜன் வந்திருக்கின்றான் என்றவுடன் பெரிதும் மகிழ்ச்சி யடைந்து உறவினருடன் அவ்விடம் வந்தான். செல்வராஜ னைக் கண்டு அளவிலா வானந்தங் கொண்டு அவனை மார் போடிறுகத் தழுவி யுச்சுமோந்து முத்தமிட்டான்.

பிறகு ஞான சூரியரை நோக்கி, "மாதவ மூர்த்தியே! செல்வராஜன் ஏன் சந்நியாசி யேடம் பூண்டான்? அவன் எவ் விதம் எங்ஙனம் இவ்வளவு நாட்களாக வசித்து வந்தான்? தாங்கள் அதை அறிந்திருக்கிறீர்களென்று யாங்கள் எண்ணு கிறபடியால் அதனைத் தெரிவிக்க வேண்டுமென்று சபையி லுள்ளோர் கேட்டார்கள்,

அங்ஙனம், சபையோக்களை நோக்கி ஞானிசூரியர் ஆதி முதல் நடந்த விஷயங்களையும், செல்வராஜன் ஈஸ்பரன் கோயி.

லில் வடிவாம்பாளைக் காந்தருவ மணஞ்செய்து கொண்டதை யும் தெரிவித்தார்.

இதைக்கேட்ட சபையோர்கள் இவையாவும் பகையா யுள்ள ஜயபாலன், தனபாலன் ஆகிய விருவரையு மொன்று கூட்டிவைப்பதற்காக ஞானசூரியரே முயற்சி யெடுத்துக் கொள்ளவேண்டு மென்றார்கள்.

அதன் பின்னர், செல்வராஜனுக்கும், வடிவாம்பாளுக் கும் அம்மாளிகையில் விவாகம் இனிது நடைபெற்றது. அழகையிழந்த அங்கநாம் மீண்டும் அழகுபெற்று விளங்கிற்று. ஜனங்களும் இனி நாட்டில் கலகம் ஏற்படாது என்று பேசிக் கொண்டார்கள். செல்வராஜனும் தான் காதல்கொண்ட வடிவாம்பாளை மணஞ்செய்துகொண்டு இன்பமாய் வாழ்ந் தார்கள.

சுபம்! சுபம்!! சுபம்!!!

சம்பூரணம்

மனமடக்கும் மர்மம்

மனிதன் மனதைக் குரங்குக்குச் சமானமாகச் சொல்லி யிருக்கின்றார்கள். கிளைக்குக் கிளைபாய் வது குரங்கு. விஷயம் விட்டு விஷயம் பாய்வது மனம். ஆகவே, மனதை யொருவழிப் படுத்துவதைப் பெரிய லட்சியமாகக்கொண்ட நம் முன்னோர்கள் சிந்தையை வடக்கிச் சும்மாவிருக்கின்ற திறம் அரிது என்றார்கள். அவ்வாறு சிந்தையை யடக்கச் சகல காரியமும் சித்திக் கும். இது விஷயம் விரிவாக மனோதத்து ரகசியம் என் னும் நூலிற் காண்க விலை அணா 12.

எல்லா புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்.

மனோரஞ்சனி பிரஸ், சௌகார்பேட்டை, சென்னை.

13-1
5061

இதுகாறும் நீங்கள் பார்த்திராத வாழ்க்கையின் மர்ம நூல்!
வெளிவந்துவிட்டது! வாங்கி வாசியுங்கள்!!

கொக்கோக ரகசியம் அல்லது

வாழ்க்கையின் மர்மம்

(உண்மையைக் கூறும் உயரிய நூல்)

வாழ்க்கையின்பத்தைப் பெறவிரும்பும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் அன்புற்றுப் படிக்க வேண்டிய இன்பநூல் இதுவொன்றே! இந்நூல் இப்பொழுதுதான் பல மதன சாஸ்திரங்களை யாராய்ந்து எழுதி வெளியிட்டிருக்கின்றனம்.

இதில் 1. மானிடப்பிறவியின் மாண்பு 2. சரீர பாதுகாப்பு. 3. கற்பிலக்கணம். 4. நான்குவகைப் புருடர்கள் (புருடரிலக்ஷணங்கள்) 5. நான்குவகைப் பெண்கள். (பெண்ணிலக்ஷணங்கள்) 6. ஆண்பெண் பருவகாலம், 7. ருதுநூல், 8. திருமணம், 9. காதல். 10. விதவாவிவாகம், 11. கல்வி, 12. பெண் கல்வியினவசியம் 13. மணவாழ்க்கையின் மாண்பும், சதிபதிகள் ஒற்றுமையும், 14 வாழ்க்கையிலின்பமும், வறுமையும், 15 அன்னியதாரத்தாசையாலடையும் பலன். 16 கள்ளுண்ணல், 17. சூதகம், 18. அமுர்த நிலையறிதல், 19. கலவிக்குகந்தகாலம், 20. கலவியில் கோக்கோகலீலை 21. கலவியில் கவனிக்கத்தக்கவை, 22. கர்ப்பாவஸ்தையும் கர்ப்பசின்னங்களும், 23. கர்ப்பகாலத்தில் கவனிக்கத்தக்கவை, 24. கர்ப்பகாலத்தில் செய்யத்தக்க சடங்குகள், 25. வாழ்க்கையினீதிமஞ்சரியாகிய பல விடயங்களும், பக்கந்தோறும்பொன்னேபோற் போற்றத்தக்க நீதிவாக்கியங்களும் நிறைந்திருக்கின்றன. இதுபோன்ற இரகசிய நூல் இதுவரை வெளிவந்ததில்லை. அணா 12.

விலாசம்:—கௌரிவிலாச புத்தகசாலை,
சௌகார்பேட்டை, மதராஸ்.